Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-10 | 26-10-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -251

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10477) T.P: 024-222 4247

# புலிகளிடம் இடை.நிர்.சபை வழங்கப்படின்

# அரசாங்கம் எதிர் விளைவுகளைச் சந்திக்கும்!

## ஜே.வி.பி-தேசாபிமானிகள் அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

**இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப்புலிகளுக்கு அரசாங்கம் வழங்க முன்வந்தால் பாரதூரமான எதிர் விளைவுகள் ஏற்படும் என ஜே.வி.பியும் தேசாபிமானிகள் இயக்கமும் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளன. அத்தோடு கடந்த காலத்தை மறந்து செயற்படவேண்டாம். எனவும் அரசாங்கத்தை எச்சரித்துள்ளன.**

நேற்று முன்தினம்இடம் பெற்ற கூட்டமொன்றிலேயே ஜே.வி.பி. யின் பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்சவும் தேசாபிமானிகள் அமைப்பின் தலைவர் குணவன்ச தேரரும்இத்தகைய எச்சரிக்கை களை விடுத்துள்ளனர்.

இக்கூட்டத்தில் பேசிய விமல்வீர வன்ச:

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையைப் புலிகளிற்கு வழங்கப் படுவதை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் சனாதிபதிக்கு பூரண அதிகாரம் இருந்தும் அவருக்கு அந்த அதிகாரத்தை பயன்படுத்தக்கூடிய நிலை இருக்கவில்லை. அந்த

(12 ஆம் பக்கம்பார்க்க)

## சுவிஸில் இருந்து தமிழ்ச்செல்வன் மாத இறுதியில் திரும்புவார்

(அலுவலக செய்தியாளர்)

ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட அரசியல் விவகாரக் குழுவினரில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் இம் மாதம் இறுதியிலேயே நாடு திரும்புவார்.

சில முக்கிய விடயங்கள் தொடர் பாக சுவிற்சர்லாந்தில் தங்கிருக் கும் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்க ளும்,சமாதானச் செயலகப் பணிப் பாளர் புலித்தேவன் அவர்களும் மற்றும் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த செல்வி அவர்களும் இம்மாத இறுதியில் நாடு திரும்பு வார்கள் என்றும் தெரியவந் துள்ளது. (கு)

## கேணல் சூசை,நடேசன் வன்னி திரும்பினர்



கடந்த மூன்று வாரங்களாக ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினரில் ஒரு பகுதியினரும், மருத்துவச் (12 ஆம் பக்கம்பார்க்க)

## யசூசி அகாசி நாளை கொழும்பு வருகிறார்

ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி சிறிலங்காவுக்கான பயணம் ஒன்றின்ன மேற்கொள்ளவுள்ளார்.

நாளை சிறிலங்காவிற்கு வரும் இவர் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவையும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் மற்றும் உயர்மட்டக் குழுக் களையும் சந்தித்துக் கலந்துரையாடுவதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்டத்தினரையும் சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரியவருகிறது. இவரது இவ விஜயமானது சிறிலங்காவுக்கான எட்டாவது விஜயமென்பதும் குறிப்பிடத்தக்கது.

## இராணுவத் துணையுடன் மதுபான விற்பனை நிலையம் இணுவிலில் மக்கள் குடியிருப்புப் பகுதியில் திறப்பு

### -எதிர்த்து மக்கள் அமைப்புகள் மறியல் போர்

(யாழ்ப்பாணம்)

இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்புடன் வலிகாமத்தின் இணுவில் பகுதியில் நேற்றுக் காலை திறக்கப்பட்ட மதுபான விற் பனை நிலையத்தை மூடி விடுமாறு வலியுறுத்தி அப் பகுதி பொது அமைப்புக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நேற்று நடாத்தி யுள்ளன. அத்துடன் உடுவில் பிரதேச செயலகம் முன்பாக திடீர் மறியல் போராட்டமொன்றையும் நடாத்தியுள்ளன.

யாழ்.நகரிலிருந்தான காங் கேசன் துறை வீதியில் இணுவில் தியேட்டர் லேன் பகுதியில் குறித்த மதுபானச் சாலையை திறப் பதற்கான முயற்சிகள் நீண்ட நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வந்திருந்தது எனினும் மக்கள் குடியிருப்புப் பகுதியில் குறித்த மதுபானச் சாலையினை திறப் பதற்கு அப்பகுதி பொது அமைப் புக்கள் பலவும் தொடர்ச்சியான எதிர்ப்பினை வெளியிட்டுவந்தி ருந்தன.

இந்நிலையில் தென்னிலங்கை யைச் சேர்ந்த பெரும்பான்மை யின் அரசியல் கட்சியொன்றின் செல்வாக்குடன் இம்மதுபான

(12 ஆம் பக்கம்பார்க்க)

## கோதுமைமாவின் ஆகக் கூடுதல் விற்பனைவிலை நிர்ணயம்

கோதுமைமாவின் ஆகக் கூடுதல் விற்பனை விலை தமிழீழ விடுதலைப்புலிகள் நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அது அறிவித்தல் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

| விரிப்பு | வன்னி | யாழ் |
|---|---|---|
| பச்சை மாவு | 22.90 | 23.50 |
| வெதுப்பக மாவு | 28.50 | 28.50 |

மக்கள் நலன் கருதி கோதுமை மாவின் ஆகக் கூடுதல் விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ் விலையை விடக் கூடுதலான விலை யில் மாவினை விற்கவேண்டாமென வாணிபர் அனைவரையும் கேட்டுக்கொள்வதாக விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் அறிவித் துள்ளனர்.

## வெள்ளவத்தையில் துப்பாக்கிச் சூடு இளைஞர் ஒருவர் ஸ்தலத்தில் பலி!

### மேலும் இருவர் காயம்

(கொழும்பு)

வெள்ளவத்தைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் ஒரு இளை ஞன் உயிரிழந்ததுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்றிரவு 10.30 மணியளவில் வெள்ளவத்தை றொக்ஷிகார்டின் என்ற இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இனந்தெரியாத நபரொருவரி னால் வீடொன்றில் இருந்த இளைஞர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட

(12 ஆம் பக்கம்பார்க்க)

## விவசாய நில ஆக்கிரமிப்புக் குறித்து உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

### மாவை.சேனாதிராசா உட்படப் பலர் வழக்கு

பலாலி அதியுயர் இராணுவப் பாதுகாப்பு வலயத்திற்குள் இராணுவம் அனுமதிக்காத காரணத்தால் தமது விவசாய நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்து தமது அடிப்படை உரிமை மீறப்பட்டி ருப்பதாகக் கூறிப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உட்பட்ட விவசாயிகள் தாக்கல் செய்த மனுமீதான விசாரணை நேற்று (25) உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றது. இவ்விசாரணையின் போது மேற்படி விவசாய நிலங்களில் விவசாயம் (12 ஆம் பக்கம்பார்க்க)

## பொலிகண்டிக் கிணற்றில் தாயினதும், மகளினதும் சடலங்கள் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பொலிகண்டிப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றினுள் இருந்து இரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று முற்பகல் பொலி கண்டி மேற்குப் பகுதியில் உள்ள வீட்டுக் கிணறு ஒன்றினுள் இருந்து மீட்கப்பட்ட இச்சடலம் அதே இடத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மேரி அன்ரனிற்றா (வயது-37) என்பவருடையது எனவும், மற்றையது அவரது மகளான அ. மேரிசுமித்திரா (வயது- 05) என்பவர்களுடையது என இனங்காணப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம்பார்க்க)

## வீரவணக்கம்

நேற்று முன்தினம் மட்டு அம்பாறை மாவட்ட ஆறுமுகத் தான் குடியிருப்பில் கருணா தேச விரோதக் குழுவினரால் சுடப் பட்டு நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர்- வசந்தன் ராஜி-வசந்தகுமார் (ஆறுமுகத் தான் குடியிருப்பு தன்னாமலை மட்டக்களப்பு) என்ற நாட்டுப் பற்றாளரே வீரச்சாவடைந்தவரா வார். இவருக்குத் தமிழீழ விடு தலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்து கின்றனர்.

# காலைக்கடனைக் கழிக்கச் சென்ற மாணவனைக் காணவில்லை

## காற்சட்டை, சேட் கண்டுபிடிப்பு

மல்லாவி அனிஞ்சியன்குளம் 2ஆம் பகுதியைச் சேர்ந்த தவராசா ஜெயசுதர்சன் (சுதன் வயது -17) எனும் பாடசாலை மாணவன் 23.10.2004 அன்று மாலை 6.30 மணிக்கு வீட்டில் இருந்து பின் பக்கமாக உள்ள காட்டிற்குள் காலைச் கடனைக் கழிக்கச் சென்றவர். இன்றுவரையும் வீடுதிரும்பவில்லை.

அவர் அணிந்திருந்த கறுப்பு காற்சட்டை வெள்ளைச்சேட் ஆகியன காட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர் பற்றிய விபரம் தெரிந்தவர்கள் அருகில் உள்ள காவல்பணிமனையிலோ அல்லது அரசியல்துறையினரிடம் தெரியப் படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

# மன்னார் துயர்துடைப்புச்சங்கம் தொண்டர் ஆசிரியருக்குக் கொடுப்பனவு

மன்னார் துயர்துடைப்புச் சங்கம் மடு கல்வி வலயத்திலுள்ள மாணவர்களின் நலன் கருதி வளங்கள் இல்லாத பாடசாலைகளைத் தெரிவுசெய்து வலயக் கல்விப்பணிப்பாளரின் அனுமதியுடன் ஆங்கில ஆசிரியர்களுக்கும்,தொண்டர் ஆசிரியர்களுக்கும் கொடுப்பனவு வழங்கியுள்ளது.

மன்னார் மாணவர்களின் கல்வி நிலையினைக் கருதி பணஉதவி செய்து வருகின்ற மேற்படி சங்கம் மாதாந்தம் 15ஆயிரம் ரூபாவினை வழங்கியுள்ளது. இதற்கெனத் தனியான அலுவலகமொன்று மடுப்பிரதேசத்தில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (மி)

# பெற்றோர் விழிப்புணர்வு செயலமர்வு பூநகரியில்

பூநகரிஅபிவிருத்தி புனர் வாழ்வுக்கழகத்தில் 22முன்பள்ளிகளைச்சேர்ந்த பெற்றோர்களிற்கான ஆரம்பப்பிள்ளைப்பருவ விருத்தியின பெற்றோர் விழிப்புணர்வுச் செயலமர்வு கிளிமாவட்ட முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.சிவநாதன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியை தமிழர் புனர் வாழ்வுக்கழக மாவட்டத்திட்டமிடல் உத்தியோகத்தர் சிவஞானசுந்தரம் ஏற்றினார்.அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கைப் பூநகரி முன் பள்ளிப் பிரதேசஉபதலைவர் வஇ.இராச துரை பூநகரி பங்குத்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.சிவநாதன் ஆகியோர் ஏற்றினர்.பெற்றோருக்கான கருத்துரையை முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.சிவநாதன் வழங்கினார். இச்செயலமர்வில் கிராமசேவையாளர்களான தி.சிவலிங்கம் தி.சுப்பிரமணியம். பூநகரி கடற்புலி அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதன், பூநகரி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈகைவேந்தன், உளவளத் துறையைச் சேர்ந்த ப.சண்முகம் புனர்வாழ்வுக்கழகத்தலைவர் இ.பஞ்சாட்சரம் என 85பேர் கலந்து சிறப்பித்தனர். இச்செயலமர்வு காலை 8.30 மணிதொடக்கம் நண்பகல் 12.30மணிவரை நடைபெற்றது.


**வரிவிளம்பரம்**

**தவறிவிட்டது**

எலியாஸ் - விமலதாஸ் இல:-5 ஐந்து வீட்டுத்திட்டம் கிளிநொச்சி என்னும் முகவரி இடப்பட்ட தேசிய அடையாள அட்டை வலயக்கல்வி பணிமனை பணியாளர் உறுதிப் படுத்தும் அட்டை,நிரந்தரப்பயண அட்டை என்பன அடங்கிய பேஸ் (ஆண்களுக்குரியது) 21.10.2004 மாலை - 7.00மணிக்கு புதுக்குடியிருப்பு சந்திக்கும் குழந்தை யேசுகோவிலுக்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தீபன் மருந்தகத்தில்ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(4700)

**நாகபூசணி அம்மன் திருமணசேவை**

எமது திருமண சேவையின் மூலம் சீதனம் கொடுக்க வசதி இல்லாமல் திருமணம் செய்யாதிருக்கும் பெண்கள், சீதனம் கொடுத்து திருமணம் செய்யக் கூடிய பெண்கள், சீதனத்தை எதிர்பாராமல் திருமணம் செய்யக்கூடிய ஆண்கள் மற்றும் சர்வதேச ரீதியில் வாழ்கின்ற ஆண், பெண் இரு பாலரின் ஜாதகங்களும் உள்ளன.

மற்றும் ஜாதகம், புகைப் படம் என்பவற்றுடன் நேரிலோ, அல்லது கடிதம் மூலமுமோ தொடர்பு கொள்ளவும்.

NO.70
STATION R.D
VAIRAVAR PULIYAN KULAM,
VAVUNIYA
SRI LANKA.
T.P:- 077 6630207
024 2222301
FAX:- 024 2222150
E.mail:- sri nagapusani amman thirumanasavai @yahoo.com.

(சி-10580)

**பணிநிலை வெற்றிடம்**

**அழகியல் கலாமன்றம் கிளிநொச்சி**

**பதவி:-** செயற்திட்ட இணைப்பாளர்

**தகைமை:-** க.பொ.த.சா.தரம் சித்தி, க.பொ.த.உ.தரம் சித்தி ஆங்கில அறிவுள்ளவராகவும் உந்துருளி இயக்கக் கூடியவராகவும் இருப்பின் அவை மேலதிக தகமையாக கொள்ளப்படும்.

**வயது:-** 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.

**விண்ணப்ப முடிவுத்திகதி :- 10.11.2004**

சுயவிபரத்துடன் விண்ணப்பம் அனுப்பப்படவேண்டிய முகவரி

செயலாளர்,
அழகியல் கலாமன்றம்,
கிளிநொச்சி.

(சி.10286)


# வேளான் இடுபொருள் வாணிபர்களின் கவனத்திற்கு

உழவர்களின் நலன்கருதி வேளான் இடு பொருட்களுக்கான ஆகக்கூடுதல் விற்பனை விலையைத் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப்பகுதி அறிவித்துள்ளது. இது குறித்து அது வெளியிட்டுள்ள அறிவித்தல்: உழவர் நலன்கருதி உரங்களின் ஆகக்கூடுதல் விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விலையை விடக் கூடுதலான விலையில் உரங்களை விற்க வேண்டாமென வாணிபர் அனைவரையும் வேண்டுகிறோம்.

## 2004.10.26ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் உரங்களின் விலை விரிப்பு

| பசளையின் பெயர் | உற்பத்தி நிறுவனத்தின் பெயர் | வன்னி விற்பனை விலை | யாழ். விற்பனை விலை |
|---|---|---|---|
| யூரியா (50 கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 645.00 | 665.00 |
| | சீ.ஜ.சீ. | 660.00 | 680.00 |
| | இலங்கை உரம் | 620.00 | 640.00 |
| | ஹேலிஸ் | 660.00 | 680.00 |
| | கொலம்பியா | 660.00 | 680.00 |
| | பவர் | 630.00 | 650.00 |
| அமோனியா (50 கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 1,120.00 | 1,140.00 |
| | சீ.ஜ.சீ. | 1,315.00 | 1,335.00 |
| | இலங்கை உரம் | 965.00 | 985.00 |
| | ஹேலிஸ் | 1,140.00 | 1,160.00 |
| | கொலம்பியா | 1,090.00 | 1,115.00 |
| | பவர் | 1,315.00 | 1,375.00 |
| ரீ.எஸ்.பி. (50 கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 1,645.00 | 1,665.00 |
| | சீ.ஜ.சீ. | 1,695.00 | 1,715.00 |
| | இலங்கை உரம் | 1,470.00 | 1,490.00 |
| | ஹேலிஸ் | 1,485.00 | 1,505.00 |
| | கொலம்பியா | 1,465.00 | 1,485.00 |
| | பவர் | 1,695.00 | 1,760.00 |
| எம்.ஒ.பி. (50 கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 1,720.00 | 1,745.00 |
| | சீ.ஜ.சீ. | 1,815.00 | 1,835.00 |
| | இலங்கை உரம் | 1,340.00 | 1,360.00 |
| | ஹேலிஸ் | 1,405.00 | 1,425.00 |
| | கொலம்பியா | 1,565.00 | 1,585.00 |
| | பவர் | 1,815.00 | 1,875.00 |
| வி 1 (50 கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 1,225.00 | 1,245.00 |
| | சீ.ஜ.சீ. | 1,410.00 | 1,430.00 |
| | இலங்கை உரம் | 1,185.00 | 1,205.00 |
| | ஹேலிஸ் | 1,315.00 | 1,335.00 |
| | கொலம்பியா | 1,195.00 | 1,220.00 |
| | பவர் | 1,360.00 | 1,380.00 |
| ரீ.டி.எம். (50 கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 925.00 | 945.00 |
| | சீ.ஜ.சீ. | 1,080.00 | 1,100.00 |
| | இலங்கை உரம் | 870.00 | 890.00 |
| | ஹேலிஸ் | 920.00 | 940.00 |
| | கொலம்பியா | 980.00 | 1,000.00 |
| | பவர் | 1,125.00 | 1,145.00 |

-பல தரப்பினரும் பங்கேற்ற-

# பூநகரிப்பிரதேச மக்களின் பிரச்சினைகளைஆராய்ந்த சந்திப்பு

(பூநகரி)

பூநகரிப்பிரதேச மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கான ஒன்று கூடல் நிகழ்வென்று கடந்த வியாழக்கிழமை பூநகரி மா.வி. யில்.நண்பகல் 12.30 மணியளவில் ஆரம்பமாகியது. இச் சந்திப்பின் ஆரம்பஉரையினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான மங்களேஸ் நிகழ்தினார்.

இச் சந்திப்பில் பூநகரியின் சகல பிரதேசங்களிலும் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். .முழங்காவில் பிரதேசத்தில் இருந்து பேருந்தில் ஒரு தெகுதியினர் வந்து சேர்ந்தனர் இச் சந்திப்பில் கடற்றொழில் சங்கங்கள் சமாசங்களின் பொறுப்பாளர், பூநகரி பொருண்மியம் பொறுப்பாளர், பூநகரி மாகவித்தியாலய அதிபர், பூநகரிப் பிரதேச செயலர் மா.சிறீஸ் கந்தகுமார், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இராசன், பூநகரி வர்த்தக சங்கத் தலைவர் கடற்புலிகளின் வலயப் பொறுப்பாளர்கள் மற்றும் சகல துறை சார் போரளிகள், கடற்றொழில் சமாசத்தின் கணக்காளர் கிராம சேவகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்

இச் சந்திப்பில் நியாப் திட்டம்-2 செட்டியா குறிச்சி கிராம சேவக பிரிவில் உள்ள திகிரி விநாயகர் குளம் புரனமைக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். மணிடைக்கால்லாறு குடமுறுட்டி பாலத்தை மறித்து நீரைத்தேக்க வழி வகைகளை மேற்கொள்ள வேண்டும்.

இப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண முடியாது. நீரைத்தேக்க முற்படும் போது சில இடங்கள் நீரில் மூழ்கிவிடும் எனவும் பிரதேச செயலர் கூறினார். அதனைத் தொடர்ந்து பூநகரி அரசினர் வைத்தியசாலை, தபாற் கந்தோர் என்பன முதல் இருந்த இடத்திலேயே இயங்க ஆவண செய்ய வேண்டும் எனக் கேட்டதற்கு வைத்தியசாலை 90 வீதம் பூர்த்தியாகி விட்டதெனவும், வெகு விரைவில் திறக்கப்படும் எனவும், தபாற் கந்தோர் பிரச்சினையையும் முக்கிய கவனத்தில் எடுப்பதாகவும் கூறினார்.

அடுத்ததாக சோளன்குடியிருப்பில் இருக்கும் கல்லுடைக்கும் தொழிலாளிகளின் பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளப்பட்டன. தொடர்ந்து பூநகரி மகாவித்தியாலய அதிபரால் யுனிசெவ் மலசலகூடப் பிரச்சினை, மேல் மாடிக் கட்டட பிரச்சினை பற்றி எடுத்துக் கூறப்பட்டது. இது விடையமாக ஆவன செய்வதாகக் கூறப்பட்டது. நாச்சிக்குடாச் சந்தியிலுள்ள தவறணையை அகற்றுதல் சம்பந்தமாகக் கோரிக்கை விடப்பட்டது. அத்துடன் மாட்டு மடுவமும் அகற்றப்பட வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து பலாலிக் கடற்றொழில் சங்கத் தலைவர் தமது பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறினர். தாம் மாரிநேரத்தில் போக்கு வரத்துச் செய்வதற்கு ஒருவிதப்பாதையும் இல்லை எனக் கவலை தெரிவித்தார்.இது பற்றி தாம் கவனத்தில் எடுப்பதாகவும் பிரதேச செயலர் கூறினார்.

மற்றும் பூநகரியில் உள்ள வீதி சம்பந்தமான பிரச்சினைகள், இரணைமடு நகரில் காணியற்றோருக்கு காணி கொடுத்தல் சம்பந்தமாகவும், பஸ்போக்கு வரத்துத் தொடர்பாகவும் ஆராயப பட்டது. (34)

# நிராயுதபாணிகளாக 49 பேரைப் படுகொலை செய்த தீவிரவாதிகள் மீது தேர்தலுக்கு முன் நடவடிக்கை

அமெரிக்க இராணுவம் சூளுரை-

(பாக்தாத்)

**ஈராக்கில் இராணுவத்தில் சேரவென நிராயுதபணிகளாக நின்ற 49 பேரைப் படுகொலை செய்த தீவிரவாதிகள் மீது சனவரி மாதம் தேர்தலுக்கு முன்னர் தீவிர நடவடிக்கை மேற்கொள் ளப்படும் என அமெரிக்க இராணுவம் சூளுரைத்துள்ளது.**

ஜோர்தானியத் தீவிரவாதியான அபுமுஷாவின் புதிதாக அமைக்கப்பட்ட குழுவிற்கு ஈராக்கிய புனித போருக்கான அல்-ஹைதா இயக்கம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

49 பேரையும் தாங்களே கொலை செய்ததாக இந்தத் தீவிரவாத அமைப்பினர் அறிவித்துள்ளனர். தேர்தலுக்கு முன்னர் ஈராக்கின் பாதுகாப்பை ஒப்டைப்பதற்கென உள்ளூர் பாதுகாப்புப் படை ஒன்றை உருவாக்கும் இடைக்கால அரசின் முயற்சிகளும் சனிக்கிழமை இடம்பெற்ற இந்தத் தாக்குதலால் பின்னடைவு கண்டுள்ளது.

## புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்து

இந்தியாவும், ரஷ்யாவும் அடுத்த மாதம் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றில் கையெழுத்திடவுள்ளது. நாட்டின் எரிசக்தி பாதுகாப்பிற்கு நிலக்கரிவாயுக்கள் ஒத்துழைப்பிற்கு இது வழிவகுக்கவுள்ளது.

## ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்க இராஜதந்திரி பலி

ஈராக்கின் தலைநகர் பாக்தாத் விமான நிலையத்திற்கு சமீபமாகவுள்ள அமெரிக்க தளம் ஒன்றில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். ஈராக்கிய யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்த முதலாவது அமெரிக்க இராஜதந்திரி இவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஈராக்கிற்குக் கடன் நிவாரணம் சவுதிஅரேபியாவைப் பரிசீலிக்க வேண்டுகோள்

ஈராக்கிற்கு கடன் நிவாரணம் வழங்குவது பற்றிப்பரிசீலிக்குமாறு சவுதி அரேபியாவை சர்வதேச செலாவணி நிதியம் வலியுறுத்தியுள்ளது.

அண்டை நாட்டின் பொருளாதாரம் வலுவாக இருப்பது நல்லதென்பதை சவுதி அரேபியா உணரவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈராக் தரவேண்டிய கடன் முழுவதையும் தருவதற்கு ஏற்பாடு செய்யுமாறு அமெரிக்கா சவுதி அரேபியாவைக் கோரியுள்ளது. ஈரான்-ஈராக் போரின் போது சதாமிற்குஅரபு நாடுகள் வழங்கிய நாலாயிரத்து 500 கோடி டொலர் மாணியம் போன்றது. அதனைத் திருப்பிச் செலுத்த தேவையில்லையென அமெரிக்கா கூறியிருந்தது. ஆயினும் இது கடன்தான்.இதனை ஈராக் திருப்பிக் கட்டவேண்டும் என அமெரிக்கா வலியுறுத்துகிறது. கடனை வேண்டுமானால் குறைக்கலாம் ஆனால் அது சர்வதேச ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜப்பான்- டோக்கியோவின் வடமேற்கே உள்ள ஒலியாவில் பூகம்பத்தினால் நாசமாகிய வீடொன்றின் அருகே நடந்து செல்லும் சிறுவனொருவன். சுமார் 23 பேர் வரை இப்பூகம்பத்தினால் உயிரிழந்தும் 1400 பேர் வரையில் காயமடைந்தும் இருந்தனர்.

# காஸா அகதிமுகாம் மீது இஸ்ரேலிய இராணுவம் தாக்குதல் சிறுவன் உட்பட பத்து பலஸ்தீனர்கள் பலி!

காஸா முனையில் உள்ள தீவிரவாதிகள் முகாம் எனக் கருதப்படும் அகதி முகாம் மீது உலங்குவானூர்திகளின் உதவியுடன் இஸ்ரேலிய இராணுவம் நடத்திய தாக்குதலில் 11 வயதுச் சிறுவன் உட்பட பத்துப் பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.33 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் இஸ்ரேலிய உலங்கு வானூர்திகள் அகதிமுகாம் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்தனர்.

இஸ்ரேலிய இராணுவம் கருத்துத் தெரிவிக்கையில் தமது இராணுவ வீரர்களுக்கு எதிராக குண்டுத் தாக்குதல்களை நடத்தத் திட்டமிடும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகவே உலங்கு வானூர்தியால் தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவித்துள்ளது.

இராணுவப் பேச்சாளர் ஒருவர் தகவல் தருகையில் இஸ்ரேலியப் பொதுமக்கள் மீது அகதிமுகாமில் இருந்து மேற்கொள்ளப்படும் பலஸ்தீன மோட்டார் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

# ஜப்பானில் இருநாட்கள் இடம் பெற்ற பூகம்பம்; 23 பேர் உயிரிழப்பு, 1400பேர் படுகாயம்

(டோக்கியோ)

ஜப்பானின் வடபகுதியிலும் அதனைச் சுற்றியிலுள்ள பகுதிகளிலும் கடந்த 2நாட்களாக ஏற்பட்ட பூகம்பத்தின் காரணமாக 23 பேர் உயிரிழந்ததுடன் 1400இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். மேலும் 2000இற்கும் அதிகமான வீடுகள் இடிந்து தரைமட்டமாகியுள்ளது.

இந் நிலையில் அங்கு தொடர்ந்து நூற்றுக்கணக்கான நில அதிர்வுகள் ஏற்பட்டு வருவதால் மக்கள் பீதியடைந்து பாதுகாப்பு முகாம்களில் தங்கியுள்ளனர்.

ஏறக்குறைய 80ஆயிரம் பேர் நேற்று முன்தினம் இரவு வரை திறந்த வெளியில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் குடிநீர் மற்றும் உணவு போன்ற அத்தியாவசிய தேவைக்காக மக்கள் தவிக்கும் நிலையும் ஏற்பட்டது.

மேலும் ஜப்பானின் அதிவேக ரயில் உட்பட பல ரயில்களும் தடம் புரண்டதால் பயணிகளும் காயமடைந்துள்ளனர். இங்கு ஏற்பட்ட பூகம்பத்தின் அளவு ரிக்டர் அளவு கோளில் 5.8 புள்ளியாகப் பதிவாகியுள்ளது.

# காஸா முனையில் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நான்கு பலஸ்தீனர் பலி; நால்வர் படுகாயம்

காஸா முனையில் நேற்று முன்தினமும், நேற்றுக்காலையும் இஸ்ரேலிய இராணுவம் நடத்திய தாக்குதல்களில் 04 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளதுடன் 04 பேர் காயமடைந்துள்ளனர்.

காஸா முனையிலிருந்து அடுத்த ஆண்டளவில் வெளியேறுவதென்ற இஸ்ரேலிய பிரதமர் ஏரியல்ஷரோனின் திட்டம் பற்றி இஸ்ரேலிய பாராளுமன்றம் விவாதத்தை நடத்திய வேளை இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று இப் பிரேரணை சம்பந்தமாக வாக்கெடுப்பு இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

120அங்கத்தவர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் இப்பிரேரணையிட்டு ஆதரவாக 67 அங்கத்தவர்கள் வாக்களிப்பதைத் தொடர்ந்து இது வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும் பிரேரணையை ஆதரித்தும் எதிர்ப்புத் தெரிவித்தும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

காஸா முனையிலிருந்து வெளியேறுவதன் மூலம் மேற்கு கரையோரப் பகுதிக் குடியேற்றத் திட்டங்கள் சிறந்த முறையில் பாதுகாக்க முடியும் என்பதும் ஏரியல் ஷரோனின் திட்டமாகும். காஸா முனையிலிருந்து வெளியேறுவதற்கு நஷ்ட ஈடு வழங்குவது சம்பந்தமாக சட்ட மூலத்தை இஸ்ரேலிய அமைச்சரவை கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க சனாதிபதி தேர்தல்; ஹெரிக்கு வாக்களிப்பது தீவிரவாதிகளுக்கான அழைப்பாகவே இருக்கும்!

(வோஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதி தேர்தல் பிரச்சாரம் உச்சகட்டத்தை அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சனநாயகக் கட்சியும், குடியரசுக் கட்சியும் பரஸ்பரம், குற்றச்சாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நவீன அமெரிக்க வரலாற்றில் இந்தச் சனாதிபதித் தேர்தல் நெருங்கிய போட்டியாக இருக்கும் என்று கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

சனநாயகக் கட்சியின் ஜோன் ஹெரிக்கு வாக்களிப்பது அமெரிக்காவைத் தாக்க இருக்கும் தீவிரவாதிகளுக்கு ஒரு அழைப்பாக இருக்கும் என்று சனாதிபதி புஷ்சின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவை மகத்தான ஒரு சக்தியாக மாற்றக் கூடிய கொள்கைகளில் தெளிந்த நம்பிக்கை இருப்பதாக தெரிவித்துள்ள சனாதிபதி புஷ் தனக்கு வாக்களிக்குமாறு வேண்டியுள்ளார்.

அதேவேளை சனாதிபதி ஜோர்ஜ் புஷ் கடைப்பிடித்துவரும் பொருளாதாரக்கொள்கைகளால் பத்து இலட்சத்துக்கு மேலான வேலை வாய்ப்புக்கள் பறிபோனது மாத்திரமல்லாது அமெரிக்காவின் வருவாயும் வெகுவாகக் குறைந்து விட்டதாக ஜோன்ஹெரி குற்றம் சாட்டியுள்ளார்.

# 400 தொன் வெடிபொருட்களைக் காணவில்லை தீவிரவாதிகளிடம் சிக்கியிருக்கலாமென அச்சம்

ஈராக்கில் முன்னைய இராணுவ ஆயுதக் கிடங்கு ஒன்றில் இருந்து பல நூற்றுக்கணக்கான வெடி பொருட்கள் காணாமல் போயுள்ளதாக ஐ.நா.வின் அணு ஆய்வுக்குழு உறுதிசெய்துள்ளது.

ஈராக்கிய போர் முடிவடைந்த பின்னர் இடம்பெற்ற விசாரணைகளில் இந்தக் கிடங்கில் இருந்து கிட்டத்தட்ட 400 தொன் அளவிலான வெடிபொருட்கள் காணாமல் போயுள்ளதாக ஈராக் அதிகாரிகள் இந்த மாத ஆரம்பத்தில் ஐ.நா அமைச்சிடம் தெரிவித்ததாக ஐ.நா அணுவாற்றல் அமைப்பில் பேசவல்ல அதிகாரி தெரிவித்தார்.


ஈராக்கில் நீடித்து வரும் பாதுகாப்பற்ற நிலையில் காணாமற்போன ஆயுதங்கள் தீவிரவாதிகள் கைகளில் சிக்கியிருப்பதால் மேலும் தாக்குதல்கள் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாக கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏழுபேர் பலி

ஈராக்கில் நடைபெற்ற தொடர் குண்டுவெடிப்பில் குறைந்தது ஏழுபேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் அமெரிக்க இராணுவச் சிப்பாய்.

பாக்தாத்தின் மையப் பகுதியில் அவுஸ்திரேலிய இராணுவ வாகனத் தொடரணி மீதும் நடத்தப்பட்ட தாக்குதலில் நால்வர் உயிரிழந்தனர்.

மொசூலில் இடம்பெற்ற கார்க்குண்டுவெடிப்பில் மூன்றுபேர் உயிரிழந்துள்ளனர்.



ஜப்பானின் ஒலியாவில் பூகம்பத்தினால் பியர் போத்தல்களும் பெட்டிகளும் சிதறிக் கிடக்கும் பண்டகசாலையொன்றைக் கடந்து சைக்கிளில் செல்லும் ஒருவர்.

# டெங்கு நோய்க்கு மருந்து கிடையாது பரவாது தடுக்கும் நடவடிக்கை முக்கியமானது

## திருமலை யுனிசெப் பிரதிநிதி உரை

(திருமலை)

**டெங்கு நோய்க்கு மருந்து கிடையாது ஆதலால் அது பரவாது தடுக்கும் நடவடிக்கையில் மக்கள் ஈடுபடுவதே ஒரேவழி. இதனாலேயே பரவிவரும் டெங்கு நோய்க்கு எதிரான இயக்கம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையின் தினத்தில் திருமலை நகரில் ஆரம்பித்துள்ளோம் என யுனிசெப் அமைப்பின் திருமலை பிரதிநிதி செல்வி கபிரியெல்லா எல்றோய் கூறியுள்ளார்.**

திருகோணமலையில் நேற்று முன்தினம் மாலை டெங்கு நோய்க்கு எதிரான இயக்கம் ஒன்றை ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் துறை சார்ந்தோர் இந்த டெங்கு நோய்க்கு எதிரான இயக்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் இதில் வெற்றி காணலாம். இதனூடாக டெங்கு நோய் பாதிப்பிலிருந்து மக்களைக் காப்பாற்ற முடியும். வருவது மழைக்காலமாகையால் இந்த இயக்கத்தின் நடவடிக்கை மிக முக்கியமாகிறது என்கிறார்.

திருகோணமலை மாவட்ட கல்வி அபிவிருத்தி சபையும், ஐ.நா.தினத்தையொட்டி ஐ.நா. முகவர்கள் சுகாதாரத்திணைக்களம், வலயக்கல்வித்திணைக்களம், செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய வற்றின் ஆதரவுடன் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நகரில் டெங்குநோய் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுப் பிரச்சாரம் ஒன்றை ஆரம்பித்தது.

இத் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு மக்ஹெய்சர்த் விளையாட்டரங்கில் ஞாயிறுகாலை இடம்பெற்றது. கல்வி அபிவிருத்தி அமைப்பின் இணைப்பாளர் க.தங்கராஜா தலைமையில் நடைபெற்றநிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.தேவிகாராணி முருகுப்பிள்ளை பெண்கள் உரிமை பற்றிப்பேசினார். திருமலை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜெ.பிரசாந்த் பேசும்போது திருமலை நகரில்டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஒரு குழந்தை மரணமடைந்ததாகவும் இன்னும் நான்கு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார். டெங்குபற்றிய விழிப்புணர்வுப் பிரச்சாரம் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட வேண்டியதேவை ஏற்பட்டுள்ளது. டெங்கு பரவுவதுகுறித்து மக்கள் அதிகம் அக்கறைகாட்டுவதாகத் தெரியவில்லை என்றும், அவர் கூறினார். யுனிசெப் திருமலை பிரதிநிதி செல்வி.கபிரியெல்லா எல்றோய் திருகோணமலையில் உள்ள ஐ.நா அமைப்புக்கள் சார்பாகப்பேசினார். 15இற்கும் மேற்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 250 இற்கும் அதிகமான மாணவர்கள், செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் டெங்கு எதிர்ப்புப் பிரசாரஇயக்கத்தில் பங்குபற்றினர். (25)

## கால்நடைகளுக்கான கால்வாய் நோய் குறித்து சுகாதார சேவையினர் விழிப்புணர்வு நடவடிக்கை

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ சகாதார சேவையினரால் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது ஆரம்பித்துள்ள மழை காலத்தில் ஏற்படக்கூடிய தொற்று நோய் தடுப்பு செயற்பாடு தொடர்பாகவும் உணவு உற்பத்தி நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும், கால்நடைகளுக்கு பரவிவரும் கால்வாய் நோய் மற்றும் இந் நோயுடைய கால்நடைகளை இறைச்சிக்கு பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பாகவும் சுகாதர்ர விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் பிரதேச கிராம ரீதியாக மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் உணவு உற்பத்தி நிலையங்களுக்குச் சென்று நேரடியாக அங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை தற்போது ஆரம்பித்துள்ள மழைகாலத்தில் உணவு உற்பத்தியாளர்கள் உணவுச்சாலை உரிமையாளர்கள், கால்நடை வளர்ப்போர் மற்றும் நாளாந்தம் மக்கள் பாவனைப் பொருட்களை விற்பனை செய்வோர், பொதுமக்கள் அனைவரையும் சுகாதார விழிப்புணர்வுடன் செயற்பட்டு தொற்று நோய்களில் இருந்து அனைவரையும் பாதுகாத்துக் கொள்ளுமாறு முல்லை.மாவட்ட தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் நாயகன் கேட்டுள்ளார்.

திடீர் சுகாதார சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டு சுகாதார சீர்கேட்டுடன் செயற்படும் அனைத்து நிலையங்களும் மூடப்படுவதுடன் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஆ)

## முந்திச்செல்ல முற்பட்ட உழவு இயந்திரம் கனகபுரத்தில் பாலத்தினுள் வீழ்ந்தது

(அலுவலகசெய்தியாளர்)

கனகபுரம் வீதி 8 ஆம் பண்ணைக்கருகில் உள்ள பாலத்தில் உழவு இயந்திரம் தடம் புரண்டது.



நேற்றுகாலை 9 மணியளவில் கிளிநொச்சி கனகபுரம் வீதியில் 8 ஆம் பண்ணைக்கருகில் உள்ள பாலத்தினூடாக முன்னால் சென்றுகொண்டிருந்த உழவு இயந்திரத்தைப் பின்னால் சென்ற உழவு இயந்திரம் முந்திச் செல்ல முற்பட்ட வேளை ஏறத்தாழ6 அடிக்கு மேல் ஆழமுள்ள பாலத்தினுள் தடம் புரண்டது. இதன் போது சாரதி உழவு இயந்திரத்திலிருந்து லாவகமாக பாய்ந்து விட உழவு இயந்திரம் பாலத்தினுள் வீழ்ந்தது. தலைகீழாக புரண்ட இவ்உழவு இயந்திரம் நீரினுள் மூழ்கிப்போயிருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது. (ச,தீ)

## கூட்டம்

மன்னார் மாவட்ட தொழிற் சங்கங்களின் இணையத்தின் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட அரசியல்துறை சமாதான செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இணையத்தலைவர் ஐ.சற்குணராசா தலைமையில் நடைபெற்றது. தொழிற்சங்க இணையத்தின் பொறுப்பாளர் ஈழப்பிரியன் இதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். (மி)

## முள்ளியவளைப் பிரதேச தே.எ.பேரவையின் சங்கம நிகழ்வு 29 இல் நடைபெறும்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேச தமிழீழ தேசியஎழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு இம்மாதம் 29ஆம் திகதி மிகச் சிறப்பான முறையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச தே.எ.பே செயலாளர் கி.தியாகராசா தலைமையில் அன்றைய தினம் காலை9.00 மணிக்கு முள்ளியவளை மாவீரர் மண்டபத்தில் பொதுச்சுடர் ஏற்றலுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ள சங்கம நிகழ்வில் பிரதேசத்திற்குட்பட்ட சகல ஊரக தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு முள்ளியவளைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.நாகமைந்தன் கேட்டுள்ளார். (ஆ)

## நூல் வெளியீடு

துரைராசா ஜோன்சன் என்பவரால் எழுதப்பட்ட கணிதம் தரம்-9 என்ற நூலின் வெளியீடு கடந்த சனிக்கிழமை மன்னார் சித்திவிநாயகர் தேசியப்பாடசாலையில் நடைபெற்றது.


பிரதமவிருந்தினராக மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் அமெயறோபல் கலந்துகொண்டு நூலினை வெளியிட்டுவைத்தார். (மி)

## ஈருருளியில் சென்றவரை பாரஊர்தி மோதியது

**-ஈருருளியில் சென்றவர் படுகாயம்**

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கருகில் உள்ள பாதசாரிகள் கடவைக் கருகில் வீதியை கடக்க முற்பட்ட ஈருருளியை எல்வ் ரக பாரஊர்தி மோதியதில் துவிச்சக்கர வண்டி முற்றாக சேதமடைந்து அதில் பயணித்த இளம் பெண் காயமடைந்துள்ளார்.



நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் கரடிப்போக்குச் சந்திக்கு அருகில் அமைந்திருக்கும் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்பாக இவ் விபத்து இடம்பெற்றது இது தொடர்பாக மேலும் தெரியவருகையில், பாதசாரிகள் கடவைக்கு அருகாக வீதியைக் கடக்க முற்பட்ட இளம்பெண்ணை கிளிநொச்சியில் இருந்து பரந்தன் நோக்கி பொருட்கள் ஏற்றிவந்த பாரஊர்தி மோதியது. இதனால் ஈருருளியில் பயணித்த பரந்தன் குமரபுரத்தைச்சேர்ந்த 22 வயதுடைய சபாரத்தினம் மைதிலி என்ற பெண் காயமடைந்தார். அவர் பயணித்த ஈருருளிக்கு மேலாக பாரஊர்தியின் சக்கரம் ஏறியதுடன் ஈருருளியும் வாகனத்தில் செருகுண்டு சுமார் 15 மீற்றருக்கும் அதிகமான தூரம் வரை இழுபட்டுச் சென்றது. இதனால் ஈருருளி முற்றாகச் சேதமடைந்தது. காயமடைந்த பெண் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மேற்படி விபத்துத் தொடர்பான விசார ணைகளை தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (லோ,தீ)

## 90 பயனாளிகளுக்கு உள்ளீடுகள் வழங்கல்

சிறுவர் போசாக்கை மேம்படுத்தும் நோக்கில் த.பொ.மே. நிறுவனமும் உலக தர்சன நிறுவனமும் இணைந்து நடைமுறைப்படுத்தும் வீட்டுத் தோட்டச் செய்கைக்கான உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு கோரக்கன் கட்டு மாலிகா குடியிருப்பில் பரந்தன் பிரதேச இணைப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் மங்கல விளக்கினை உலக தர்சன திட்டமுகாமையா ளர் திரு.நைல்ஸ், விவசாயப் போதனாசிரியர் மாலினி, குடியிருப்புத் தலைவர் கணேஸ் அவர்களும் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை பிரதேசப் பொறுப்பாளர் மங்களேஸ் அவர்கள் ஏற்றி வைத்தார். தலைமையுரையை பரந்தன் பிரதேச இணைபபாளர் ஆற்றினார். கருத்துரை திரு.நைல்ஸ் அவர்கள் ஆற்றினார். இதனைத் தொடர்ந்து 90 பயனாளிகளுக்கும் உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் ஒரு பயனாளிக்கு தென்னை நாற்று 04 மா-01, தே.சி 01, சோளம் அரைக்கிலோ, பயறு அரைக் கிலோ, மரக்கறி விதைப் பைக் கற்றுக்களும் மொத்தம் 500/= பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் உலக தர்சன, பிரதிநிதிகள், பொ.மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதிகள், கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கட்டாக்காலி நாய்களால் ஒட்டுசுட்டானில் தொல்லை

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இப் பகுதியில் வீதியால் சென்று வரும் பொதுமக்கள் பலர் நாய்க்கடிக்கு இலக்காகி வருகின்றனர். இருந்தும் இக்கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கான முயற்சிகள் எதுவும் இதுவரை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இதேவேளை வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசிகள் என்பனவும் இதுவரை போடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## மண்டைதீவு வைத்தியசாலை புனரமைப்பு முயற்சி

# கடற்படையின் நடவடிக்கையால் கைவிடப்பட்டது

### மருத்துவ வசதியின்றி மக்கள் அவதி

(தீவகம்)

**யாழ். மண்டைதீவு அரசினர் பொது மருத்துவமனையைப் புனரமைப்புச் செய்து மீள இயங்க வைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அங்கு நிலை கொண்டுள்ள கடற்படையினரின் பெரும் முட்டுக் கட்டையால் கைவிடப்பட்டுள்ளன.**

மண்டைதீவுப் பகுதி முற்று முழுதாக இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு இருந்தாலும் அரசு- புலிகளுக்கிடையேயான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்தும் அப்பகுதியில் உள்ள சில இடங்களில் மக்களை குடியேற படையினர் அனுமதித்துள்ளனர்.

இவ்வாறு படைத்தரப்பின் அனுமதியுடன் அப்பகுதியில் குடியமர்ந்துள்ள சுமார் 300இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மருத்துவ வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை.

இந்நிலையால் அப்பகுதி மக்கள் எதிர்கொண்டுள்ள பெரும் பிரச்சினைகளை கவனத்தில் கொண்டு மண்டைதீவு இராணுவத்தினால் தகர்த்தளிக்கப்பட்ட நிலையில் காணப்படும் அரசினர் பொது மருத்துவமனையை புனரமைத்து மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இடிந்த நிலையிலுள்ள மேற்படி வைத்தியசாலையை நேரில் சென்று பார்வையிடவும், அதன் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் அப்பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் தடை விதித்துள்ளனர்.

இதனால் இவ் வைத்தியசாலையின் புனரமைப்பு நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளன. (33)

## படிப்பகத்தை இயக்க சிறி.படையினர் தடை

(தென்மராட்சி)

சாவகச்சேரி கச்சாய் வீதியில் அமைந்துள்ள திருவள்ளுவர் படிப்பகத்தை புனரமைத்து மீள இயக்குவதற்கு சிறிலங்காப் படையினர் தடைகளை விதித்துள்ளனர்.

கடந்தகால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக சேதமடைந்த நிலையில் காணப்படும் மேற்படி படிப்பகத்தை புனரமைப்புச் செய்து மீள இயக்குவதற்கு அப்பகுதிமக்கள் பல தடவைகள் முயற்சி செய்தபோதும் இப்படிப்பகத்தின் சூழலில் உள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தினதும், அப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரதும் பாதுகாப்புக்களைக் காரணம் காட்டி அதற்குப் படையினர் தடைவிதித்துள்ளனர்.

இதனால் அப்பகுதி வாழ் மக்களின் அறிவியல் சார் முன்னேற்ற நடவடிக்கைகளும் படிப்பகங்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித்திட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் அமைப்புக்களால் குற்றஞ் சாட்டப்படுகிறது. (33)

## கடற்றொழிலாளர் வாடி அமைக்க கடற்படை அனுமதி மறுப்பு

(தீவகம்)

யாழ்.புங்குடுதீவு கடற்கரை ஓரங்களில் கடற்றொழில் உபகரணங்களை வைத்துப்பேணுவதற்கான வாடிகளை அமைப்பதற்கு கடற்படையினர் முற்றாகத் தடைவிதித்துள்ளனர்.

மேற்படி பகுதிகளில் நிலை கொண்டுள்ள கடற்படையினரின் பாதுகாப்பினைக் கவனத்தில் கொண்டு இப்பகுதிகளில் வாடிகளை அமைப்பதற்கு படையினர் முற்றாகத் தடைவிதித்துள்ளதால் கடற்றொழிலுக்குச் செல்லும் தொழிலாளர்கள் தினமும் தாம் கடற்றொழில் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் உபகரணங்களை கடற்கரையிலேயே வைத்துப் பேணிப்பாதுகாக்க முடியாத நிலை காணப்படுகிறது.

இதனால் இப்பகுதி கடற்றொழிலாளர்களின் இயல்பான தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக அப்பகுதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். (33)

## விடுதிக்கருகில் குப்பை கொட்டுவதால் நோய் பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆனந்தக் குமாரசாமி பெண்கள் விடுதிக்கு அருகாமையில் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் குப்பை போடுவதால் அவ் வீதியால் போக்குவரத்தை மேற்கொள்பவர்கள் பலத்த அசௌகரியங்களைத் தாங்க வேண்டியுள்ளது.

தற்பொழுது மழைகாலம் ஆகையால் அப்பகுதியில் மழை நீர்தேங்கி நிற்பதோடு குப்பைகளும் போடப்படு:வதால் அவ் வீதியால் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாமல் உள்ளது அத்தோடு இதனால் நோய் பரவக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (36)

## 25 எழுவைதீவு மீனவருக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கல்

(தீவகம்)

யாழ்.தீவகத்தில் உள்ள எழுவைதீவு பகுதிவாழ் மீனவர்களின் தொழிற்றுறை மேம்பாட்டிற்கான உதவிகளை வழங்க "கியூடெக்" அமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அந்த அடிப்படையில் கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மற்றும் இடப்பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் எழுவைதீவு மீனவர்களில் 25 பேருக்கு மீன்பிடி உபகரணங்களை "கியூடெக்" அமைப்பு இலவசமாக வழங்கியுள்ளது.

இதில் ஒவ்வொருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள், மீன்பிடி உபகரணங்கள் இயந்திர உதிரிப்பாகங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. (33)

## அனுமதியின்றி பனை தறிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

### -யாழ். அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அனுமதி பெறாது பனைமரங்களைத் தறிப்போர்மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள பல இடங்களிலும் அனுமதி பெறாது சட்டவிரோதமான முறையில் பனை மரங்கள் தறித்தெடுக்கப்பட்டு வருகிறது. இதனால் யாழ்ப்பாணத்தில் பனை வளத்தை நம்பி வாழ்வோர் பாதிக்கப்படுவதுடன் பனைவளம் குன்றிப்போகும் நிலையும் காணப்படுகிறது.

இது குறித்து பனைவள அபிவிருத்திசார் அமைப்புகள் செய்த முறைப்பாடுகளை அடுத்து யாழ். அரசாங்க அதிபர் இவ்அறிவித்தலை விடுத்துள்ளார்.

இதனடிப்படையில் பனை மரங்களை அனுமதி பெறாது தறிப்போர் மீதும், அவற்றை இடமாற்றம் செய்வோர் மீதும் கடும் சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படவுள்ளது.

இது பற்றிய முக்கிய கூட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.அரச செயலகத்தில் இடம் பெற்றுள்ளது. இதில் பனைவள துறைசார் அதிகாரிகள், யாழ்.அரச அதிபர் உட்பட்டோர் கலந்து கொண்டனர். (33)

## ஊரதீவு-திருநாவுக்கரசு மகா.வித். மீள இயக்கக் கோரிக்கை

(தீவகம்)

யாழ். புங்குடுதீவின் ஊரதீவு திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தைப் புனரமைத்து மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு புங்குடுதீவு பிரதேச பொது அமைப்புக்கள் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

1990ஆம் ஆண்டு புங்குடுதீவில் இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையின்போது முற்றாகச் சேதமடைந்த இப்பாடசாலை இதுவரை காலமும் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுகிறது.

இதனால், இப்பாடசாலை அமைந்துள்ள சூழலில் வாழும் மாணவர்கள் நீண்ட தூரங்களுக்கு அப்பால் உள்ள வேறு பாடசாலைகளுக்குச் சென்று தமது கற்றலில் ஈடுபட வேண்டிய அவல நிலை காணப்படுகின்றது. எனவே, இதனைக் கவனத்தில் கொண்டு மேற்படி பாடசாலையைப் புனரமைத்து மீள இயக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. (33)

## சர்வதேச மனித உரிமைச் சட்டங்களைச் சரிவர அமுல்ப்படுத்துவதற்கான முயற்சியில் சர்.செ.சங்கம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை யாழ். குடாநாட்டில் சரிவர அமுல்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மேற்கொண்டுள்ளது.

சிறிலங்காப் பொலிசார் உட்பட யாழ்.குடாநாட்டில் உள்ள சட்டத்துறைசார் அரச அமைப்புக்களின் சட்ட அமுலாக்கல் நடவடிக்கைகளில் பல்வேறு பட்ட உரிமை மீறல்களும், அதிகாரதுஷ்பிரயோகங்களும் இடம்பெற்று வருவதாக யாழ். குடாநாட்டில் உள்ள பல்வேறுபட்ட அமைப்புக்களும் குற்றஞ்சாட்டி வருகின்றன.

இதனால் சர்வதேச மனித உரிமைச்சட்டங்களை மதித்து சட்ட அமுலாக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியம் என்ற கருத்தை வலியுறுத்தும் விதத்தில் சட்டத்துறைசார் யாழ்.குடாநாட்டு அமைப்பினருடன் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் முக்கிய கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது. (33)

## யாழ்.பொது நூலகத்திற்கு நிதி உதவி பிரிட்டன் அரசு இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொதுநூலகத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கான உதவிகளை வழங்க பிரிட்டன் அரசாங்கம் முன்வந்துள்ளது.

சிங்களபேரினவாத அரசின் திட்டமிட்ட வன்செயலினால் தெற்காசியாவின் அறிவுப் பொக்கிசமாக விளங்கிய மேற்படி நூலகம் எரித்து நாசம் செய்யப்பட்டது.

இது தற்போது புனரமைக்கப்பட்டு இயங்கக் கூடிய நிலையில் உள்ள போதும் இங்கு ஆளணிப்பற்றாக்குறை , தளபாடப்பற்றாக்குறை, போதியளவு புத்தகங்கள் இல்லாத நிலைமைகள் காணப்படுகின்றன.

இதனால் இந்நூலகத்தின் மூலம் மக்கள் முழுமையான பயனைப் பெறமுடியவில்லை.

இந் நிலைமையைக் கவனத்தில் கொண்டே பிரிட்டன் அரசு இந் நூலகத்தின் சேவை மற்றும் வளங்களை விருத்தி செய்வதற்கான நிதி உதவியை வழங்க முன் வந்துள்ளது. (33)

## ப.நோ.கூ.சங்கக் கட்டடம் வளலாயில் அமைக்க படைத்தரப்பு முட்டுக்கட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலிப்பிரதேசத்தில் உள்ள வளலாய்ப் பகுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் ஒன்றை அமைக்க சிறிலங்காப் படையினர் தடை விதித்துள்ளனர்.

வளலாய்ப் பகுதியில் பலாலி இராணுவப் படை தலைமையகத்தின் முன் அரங்க நிலையங்கள் அமைந்திருப்பதன் காரணமாக அப்பகுதிகளில் புதியகட்டங்கள் அமைக்கப்படுவது அப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதைக் காரணம் காட்டியே படையினர் இதற்கு தடைவிதித்துள்ளனர்.

இதனால் அப்பகுதி மக்களின் சமூக முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திகள்கடுமையாகப்பாதிக்கப்பட்டிருப்பதாக பொது அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன. (33)

## யாழ்.சிறைச்சாலையில் இடநெருக்கடி கைதிகள் பலருக்கு வயிற்றோட்ட நோய்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையினுள் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளிடையே வயிற்றோட்ட நோய் பரவி வருவதாகத் தெரியவருகிறது.

யாழ்.சிறைச்சாலையினுள் காணப்படும் இடநெருக்கடி காரணமாக அங்கு உரிய முறையில் சுகாதாரம் பேணப்படாததினாலேயே இவ்வாறு அங்கு வயிற்றோட்டம் பரவி வருகிறது.


இதனால் கடந்த ஒரு மாதகாலத்துள் 15 பேர் வரை வயிற்றோட்டத்தின் தாக்கத்திற்கு இலக்காகியிருப்பதாக சிறைச்சாலை வட்டாரம் தகவல் தெரிவிக்கின்றது. (33)



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

ஜெயசூரிய.... கிரிக்கெட்டின் அபாய கரமான துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர். தனிநபராக ஆட்டத்தின் முடிவுகளை மாற்றக் கூடியவர். அவரது ஆட்டத்தில்



முன்பிருந்த "நெருப்பு" இப்போது இல்லை. ஆனாலும் அபாயகரமான வீரராகவே அவர்மதிக்கப்படுகிறார். சமீப காலமாக 'மீடியா' வெளிச்சத்தில் இருந்து விலகியிருக்கும் கிரிக்கெட்வீரர் சனத் ஜெயசூரிய வழங்கிய பேட்டி,

***முன்புபோல்அதிரடி ஆட்டங்கள் உங்களிடம்இப்போபார்க்கமுடியவதில்லையே?**

இல்லை எப்போதும் போலத்தான் ஆடுகிறேன். அதேசமயம்எனது விக்கெட்டின் பொறுப்பை உணர்ந்து ரிஸ்க் எடுப்பதைக் குறைத்திருக்கிறேன்.

*** துடுப்பாட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லும் படி சமீப காலமாக பெரிய சாதனை எதுவும் உங்களிடம் இல்லை வருத்தமாக இல்லையா?**

# இலக்கு 2007

அதெல்லாம் இல்லை எனது ஆட்டம் ஒரே சீராகத்தான் இருக்கிறது. ஒழுங்காக துடுப்பாட்டம் செய்யாமல் அணியில் எப்படி நீடிக்க முடியும்? ஓரிரு போட்டிகள் சீக்கிரம் அவுட்டாகி விடுவதும் உண்டு. அப்படியான சமயங்களில் சிறப்பாக பந்து வீசி அதிக விக்கெட் வீழ்த்துவதன் மூலம் துடுப்பாட்ட இழப்பை சரிக்கட்டி விடுகிறேன்.

*** கிரிக்கெட்டில் உங்களால் மறக்க முடியாத வெற்றி...?**

ஒவ்வொரு வெற்றியுமே மறக்க முடியாததுதான் 1996 உலகக் கோப்பை வென்றது. கொஞ்சம் விசேஷமான விஷயம் காரணம் எங்கள் ஒட்டு மொத்த அணிக்கும் அந்த வெற்றி ஒரு புத்துணர்ச்சி அளித்தது. புதுப் பலம் தந்தது . அந்தத்தொடரில் "தொடர்நாயகன்" விருது எனக்குக் கிடைத்ததைமறக்கமுடியாது. 1996 உலகக் கோப்பையில் விளையாடிய வீரர்களில் சமிந்தவாஸ்,நான் இருவர் மட்டும் தான் இலங்கை அணியில் இப்போதும்விளையாடிக்கொண்டிருக்கின்றேம்.

*** உங்களது அடுத்த இலக்கு?**

எனது கிரிக்கெட் வாழ்க்கையை ஒவ்வொன்றாகத்தான் அணுகுகிறேன். அடுத்ததாக நான் எந்தத் தொடரில் விளையாடப் போகிறேனோ அது மட்டும் தான் எனது கவனத்தில் இருக்கும். அது முடிந்த பிறகு தான் அதற்கடுத்த தொடர் பற்றிய நினைப்பு வரும்.

***கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு எப்போது?**

வயது 35 ஆகிவிட்டது. ஆனாலும் ஓய்வு பற்றி யோசிக்கவே இல்லை. உடல் தகுதி, ஆட்டத்திறன் நீடிக்கும் வகையில் தொடர்ந்து விளையாடுவதில் என்ன தவறு?

*** ஓய்வுக்கு முன் சாதிக்கவேண்டும் என்ற இலட்சியம் ஏதாவது இருக்கிறதா?**

இலங்கை அணிக்கு மீண்டும் ஒரு முறை உலகக்கோப்பை வாங்கித்தர வேண்டும் அப்படியொரு ஆசை எனக்குள் இருக்கிறது. அடுத்த உலகக் கோப்பைத் தொடர் 2007 ஆம் ஆண்டு நடக்கிறது. அதுவரைக்கும் முழு உடற் தகுதி திறமையுடன் விளையாட வேண்டும் என்றார். கிரிக்கெட்உலகில் 1990இல் நுழைந்த ஜெயசூரிய 93 டெஸ்ட் போட்டிகளில் 6 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து அதேவேகத்தில் விளாசி வருகிறார்.



அதிகபட்சமாக 340 ஓட்டங்கள் (1997 இல் இந்தியாவுக்கு எதிராக ) குவித்துள்ளார். 332 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 9 ஆயிரத்து 853 ஓட்டங்கள் சேர்த்துள்ள ஜெயசூரிய ஒருநாள்போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களை அதிவேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறார்.

---

# மனச்சாட்சியா? அவமதிப்பா?

கிரிக்கெட் உலகில் இப்போது எல்லாம் "அவுஸ்திரேலியன் வோக் பற்றித்தான் அதிகம் பேசப்படுகிறது. பேஷன் ஷோக்களில் அழகுப் பெண்கள் ஒய்யாரமாக நடப்பதை 'கேட்வோக்' என்பார்கள்." அதென்ன அவுஸ்திரேலியன்வோக்?...என்பவர்களுக்கு ஒரு சின்னவிளக்கம். அதாவது நடுவர் 'அவுட்' தரும் முன்பே சம்பந்தப்பட்ட வீரர் தானாக 'நடந்து வெளியேறுவதைத் தான் அவுஸ்திரேலியன் வோக்' என்கிறார்கள். இது வீரர்களின் நேர்மைக்கான உதாரணமா அல்லது நடுவரை அவமதிக்கும் செயலா என்ற சர்ச்சை எழுந்துள்ளது. இதனை 'நேர்மை' என்று அடித்துச்சொல்லவும் இயலவில்லை. ஏனென்றால் வீரர்கள் எல்லா நேரங்களிலும் ஒரேமாதிரியாகச் செயற்படுவதில்லை. அவுட் இல்லை என்று நன்கு தெரிந்த போதும் 'முறையீடு' செய்வதைக் காண முடிகிறது. ஒரு சில சமயங்களில் நடுவரும் கையை உயர்த்தி விடுகிறார். உடனே தவறு செய்துவிட்டோமோ என்று யாரும் வருத்தப்படுவதில்லை. அந்த வீரரைத் திரும்ப அழைக்கும்படி கோருவதுமில்லை.

ஆக வீரர்கள் இரட்டை வேடம் போடுவதாக அழுத்தமான குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர் முன்னாள் வீரர்கள். அதே நேரத்தில் நடுவர்களோ இதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. நடுவரா அல்லது கிரிக்கெட்டா என்றால்.. கிரிக்கெட் தான் பெரிது என்று கூறி வீரர்களுக்கு ஆதரவு தெரிவிக்கிறார் அனுபவ ஷெப்பேர்ட். இந்த சர்ச்சையைப் பற்றி கொஞ்சம் அலசுவோம்.

## கில்கிறிஸ்ட்டின் நேர்மை

முதலில் 2003 இல் நடந்த உலகக் கோப்பை அரையிறுதி பற்றி ஒரு சிறிய விடயம். இப் போட்டியில் துவக்க ஆட்டக்காரராக வந்த கில்கிறிஸ்ட் தூள் கிளப்பிக்கொண்டிருந்தார். ஓட்ட விகிதம் எகிற, இலங்கை அணி பந்தை அரவிந்த டி சில்வா கையில் கொடுத்தது இவரது ஓவரில் கில்கிறிஸ்ட்'ஸ்லீப் ஷொட்' அடிக்க, பந்து கீப்பர் சங்கக்கரா கையில் தஞ்சம் புகுந்தது. உடனே இலங்கை வீரர்கள் அவுட் கோரினர். ஆனால் நடுவர் ரூடி கோயர்ட்சன் மறுத்து விட, எங்கும் பதட்டம். இந்தச் சூழலில் சற்றும் எதிர்பாராத வகையில் கில்கிறிஸ்ட் களத்தை விட்டு தானாகவே வெளியேறினார். நடுவர் சாதக மாகத் தீர்ப்புத் தந்தும், மனச்சாட்சிப்படி நடந்து கொண்டார் என கில்கிறிஸ்டுக்கு பாராட்டுக்கள் குவிந்தன. இதற்கு முன்பு லாறா போன்ற நட்சத்திர வீரர்கள் நடுவர் முடிவுக்காக காத்திருக்காமல் வெளியேறி உள்ளனர். ஆனாலும் உலகக் கோப்பை என்பதால், இச்சம்பவம் அதிக முக்கியத்துவம் பெற்றது. இப்போட்டியில் அவுஸ்திரேலியா ஒரு வேளை தோற்று இருந்தால் கில்கிறிஸ்ட் பற்றி வேறு விதமாக விமர்சிக்கப்பட்டிருக்கும்.

## புதியபாணி

இப்போது டெஸ்ட் அரங்கிலும் இந்த 'நடக்கும்' பாணியைத் துவக்கி வைத்துள்ளார் கில்கிறிஸ்ட். சமீபத்தில் சென்னையில் நடந்த இரண்டாவது டெஸ்ட்டின் முதல் இன்னிங்சில் வீரர்களின் செயல் விநோதமாக இருந்தது. அவுஸ்திரேலிய தரப்பில் கில்கிறிஸ்ட், மைக்கேல் காஸ்பரோவிச், கில்லஸ்பி மற்றும் இந்தியா சார்பில் கப்டன் கங்குலி, யுவராஜ்சிங் ஆகியோர் நடுவர் தீர்ப்புக்காகக் காத்திருக்கவில்லை. தாங்களாகவே வெளியேறி அதிர்ச்சி தந்தனர். இதில்மைக்கேல் காஸ்பரோவிச் அதிகமாக அவசரப்பட்டார். அதாவது கும்ளே வீசிய பந்தை இவர் அடிக்க, லட்சுமண் பிடித்து அவுட் கேட்டார். நடுவர் டேவிட் ஷெப்பர்ட் 'இல்லை' என்றார். ஆனால் காஸ்பரோவிச்சோ உண்மையை உணர்ந்தவராக தானாகவே வெளியேறினார். இப்படி வீரர்களின் நேர்மை தொடர்ந்தால் நடுவர்கள் மீதுதான் சந்தேகம் எழும். நாளடைவில் இவர்கள் மீதான நம்பகத் தன்மையும் குறைந்து விடும் என்று கூறப்படுகிறது.


இதை மறுக்கின்றனர் முன்னாள் பிரபலங்கள். வீரர்கள் அவ்வப்போது போலியாக நடிப்பதாக குற்றம் சாட்டுகின்றனர். இங்கே சில பிரபலங்களின் கருத்துக்களைப் பார்ப்போம்.

## மைக் ஆதர்டன் (இங்கிலாந்து)



அவுஸ்திரேலிய வீரர்கள் இக்கட்டான கட்டத்தில் எல்லாம் களத்தை விட்டு வெளியேறுவதில்லை. சில போட்டிகளில் மட்டுமே இவர்களது 'ஜென்டில் மேன்' செயற்பாட்டைக்காண முடிகிறது. பெங்களூர் டெஸ்டை எடுத்துக் கொண்டால், சேவக் அவுட் இல்லை என்று தெரிந்தும் அப்பீல் செய்தனர். நடுவர் பில்லி பவுடனும் எல்.பி.டபிள்யூ., கொடுத்தார். இதை எப்படி நேர்மையர்ன செயல் என்று கூறமுடியும். இதில்இருந்து இவர்களது இரட்டை வேடத்தை நன்கு புரிந்து கொள்ளலாமே. நடுவர்களுக்குச் சம்பளம் அளிக்கப் படுகிறது. எனவே தீர்ப்புக் கூறும் பணி அவர்களுடையது.

## அலன் போடர் (அவுஸ்திரேலியா)



கிரிக்கெட்டில் துடுப்பாட்ட வீரர் பந்து வீச்சாளர்களுக்கு என்று தனித்தனி யாகப் பொறுப்பு உண்டு. இதேபோல் நடுவர்களுக்கும் பிரத்தியேக பணியுள்ளது.

தீர்ப்பு அளிக்கும் பணியை இவரிடம் விட்டுவிடுவதே நல்லது. அதேநேரத்தில் இருஅணிகளும் 'நேர்மையாக' செயற்படுவது என்று ஒப்பந்தம் செய்துகொண்டால் பிரச்சினை எதுவும் இல்லை.

## டேவிட் ஷெப்பேர்ட் (நடுவர்)



வீரர்கள் தாங் களாக வெளியேறு வது அற்புதமான செயல். அவுட் என்றால் சம்பந்தப்பட்ட வீரருக்கு நன்கு தெரியும். அப்படி இருக்கையில் நடுவர் தீர்ப்புக்காகக் காத்திருப்பது தவறானது. இதில் நடுவர் சோதிக்கப்படுகின்றார் என்று கூறுவதில் அர்த்தமில்லை. நடுவரைக் காட்டிலும் கிரிக்கெட்டே பெரிது. எனவே வீரர்கள் தாங்களாக வெளியேறும் செயல் வரவேற்கத்தக்கது.

## கில்கிறிஸ்ட் (அவுஸ்திரேலியா)



இது அவுஸ்திரேலிய அணியின் கொள்கை அல்ல. தாங்களாக வெளியேறுவது என்பது ஒவ்வொரு வீரரின் தனிப்பட்ட முடிவு. நேர்மையாக இருப்பது பற்றி வீரர்கள் தான் சிந்திக்க வேண்டும். மொத்தத்தில் பார்த்தால் 'நேர்மை' கிரிக்கெட்டுக்கு மிகவும் நல்லது.

## இயன்சேப்பல்(அவுஸ்திரேலியா)

வீரர்களின் இந்த நேர்மை எத்தனை காலம் நீடிக்கும் என்று தெரியவில்லை. உலகில் போலி வேஷம் போடுபவர்கள் இன்னும் இருக்கிறார்கள் என்பதற்கு நல்ல உதாரணம்.

## ஸ்டீவோ (அவுஸ்திரேலியா)



கிரிக்கெட்டில் அதிஷ்டம் எந்தப் பக்கம் வேண்டுமானாலும் அடிக்கலாம். தீர்ப்பானது ஒரு சமயம் வீரருக்கு சாதகமாக அமையும். சில நேரங்களில் பாதகமாகவும் அமையலாம். எனவே நடுவர் தீர்ப்பு அளிக்கும் வரை காத்திருப்பதே சிறந்தது. இவர்களது கருத்துக்களைப் பார்க்கும் போது தீர்ப்பு சொல்ல தகுதியானவர்கள் நடுவர்கள்தான் என்பது தெளிவாகிறது. ஆனாலும் நேர்மைக்கு முதலிடம் கொடுத்தால் அவுஸ்திரேலிய வீரர்களின் செயற்பாடு வரவேற்கத்தக்கதே. இதை இவர்கள் அனைத்துப் போட்டிகளிலும், எல்லா சூழ்நிலைகளிலும் உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். கடைப்பிடிப்பார்களா?... என்பது தான் மில்லியன் டொலர் கேள்வியாக உள்ளது.

# உதவி வழங்கும் நாடுகள் ஒருவித சர்வாதிகாரதைப் பயன்படுத்துகின்றன

### - நிதி அமைச்சின் அதிகாரி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**சர்வதேச உதவி வழங்கும் நாடுகளும் கடன் வழங்கும் நாடுகளும் இந்நாட்டுக்கு ஒருவித சர்வாதிகாரத்தைப் பயன்படுத்துவதாக சிறிலங்கா நிதியமைச்சின் அதிகாரி ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார்.**

எமது நாட்டுக்கு ஏற்ற நிகழ்ச்சித்திட்டம் பற்றி நாம் பேசலாம். ஆனால் அவர்களின் கொள்கை ஏற்றுக் கொள்ளமுடியாதது. கடந்த 15 ஆண்டுகளாக 5.5 சராசரி வளர்ச்சி வீதமாக இருந்த பொருளாதாரம் தற்போது பிரச்சினைக்குள்ளாகியுள்ளது எனக் கூறிய அவர், சர்வதேச நிதி நிறுவனத்தினதும் உலக வங்கியினதும் விருப்பத்துக்கு ஏற்பவே நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்றார்.

கடந்த ஏப்ரலில் பதவிக்கு வந்த ஐ.ம.சுதந்திர முன்னணி அரசு பொருளாதாரத்தை மீளமைக்கும் என வாக்குறுதியளித்தது. எனினும் தற்போது எரிபொருள் விலையேற்றம் என்பனவற்றோடு திட்டமிடப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் 100 மில்லியன் டொலர்கள் பற்றாக்குறை ஏற்படும் நிலை தோன்றியிருப்பதாகவும் அது திறைசேரியைப் பாதித்துவிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருளுக்காக மேலதிகமாக செலவாகும் 350 மில்லியன் டொலர்களை சர்வதேச நிதியம் ஈடுசெய்யாது விடில் நிலைமை மேலும் மோசமடையலாம் என அவர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம் வருமதிகளை உடன் வசூலிக்கவேண்டும்

### பொது ஊழியர் சங்கம் வலியுறுத்து

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தமக்கு வர வேண்டிய வருமதிகளை உடனடியாக பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் அதனை விடுத்து தம்மிடம் எஞ்சியுள்ள பங்குகளை தனியாருக்கு விற்பனை செய்ய முயலக்கூடாது எனப் பெற்றோலியக் கூட்டுத்தாபன பொது ஊழியர்கள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. அரசாங்க திணைக்களங்கள் தனியார் துறை நிறுவனங்களிடமிருந்து பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 5 ஆயிரத்து 865 மில்லியன் ரூபா வரவேண்டியுள்ளது. இதனை உரிய முறையில் கூட்டுத்தாபனம் பெறுகின்ற நடவடிக்கையை எடுக்குமானால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடைகிறது என்ற பேச்சுக்கு இடமில்லாமல் போய்விடும் என்றும் பொது ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

## டக்ளஸ் தேவானந்தா செலவுசெய்த அரச நிதிகள் குறித்து கணக்கு இல்லை

தற்போதைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னர் பொதுசன ஐக்கிய முன்னணியின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக இருந்த போது செலவிட்டதாக கூறப்படும் நிதிகள் தொடர்பாக உரிய கணக்குகள் மேற்கொள்ளப்படவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக யாழ்ப்பாணத்தின் பல அரசாங்கப் பாடசாலைகளில் பாரிய நிதி நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட பல அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதிகள் நேரடியாக வழங்கப்பட்டு அவை செலவழிக்கப்பட்டுள்ளன. எனினும் அவற்றிற்கு எவ்வித கணக்குகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## ஐக்கிய நாடுகள் சபையினால் வவுனியாவில் கண்காட்சி

(வவுனியா செய்தியாளர்)

ஐக்கிய நாடுகள் தினத்தையொட்டி ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து நிறுவனங்களும் இணைந்து வழங்கும் கண்காட்சி சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் கிளை நிறுவனங்களான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், உலகஉணவுத் திட்டம், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

இந் நிறுவனங்களால் உலக நாடுகள் மேற்கொள்ளும் செயற்பாடுகளையும், வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளையும் இக் கண்காட்சி ஊடாகக் காண முடிந்தது. (10)

### - நியாப் திட்டத்தின் கீழ் வவு.வில் -

## புனரமைப்புச் செய்ய வேண்டிய கிராமங்கள் குறித்து விண்ணப்பங் கோரல்

(வவுனியா செய்தியாளர்)

2005 ஆம் ஆண்டில் நியாப் திட்டம் IIஇல் புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய மையக் கிராமங்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கிராம அமைப்புக்களோ, கிராமத்தவரோ, கிராம அபி விருத்தியில் அக்கறையுடைய எவருமோ கிராமம் புனரமைக்கப்பட வேண்டி இருப்பின் தமது பூரண முகவரியை குறிப்பிட்டு தங்கள் பிரிவுப் பிரதேச செயலாளருக்கு நேரடியாகவோ அல்லது கிராமசேவை அலுவலர் ஊடாகவோ எழுத்து மூலமான கோரிக்கையை அனுப்பிவைக்க வேண்டும் .

கோரிக்கையை அனுப்பியவர்களுக்கான படிவம் பிரதேச செயலாளரால் அனுப்பிவைக்கப்படும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 01.11.2004 .இதற்முன் பிரதேச செயலாளருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும் என வவுனியா மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் அவர்கள் கேட்டுள்ளார் (10)

## எரிபொருளின் விலையை அரசு அதிகரித்தால் புகையிரதக் கட்டணமும் அதிகரிக்கப்படும்

### -புகையிரத திணைக்கள அதிகாரி

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகளை மேலும் அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்குமானால் கட்டணங்களை அதிகரிக்கப் போவதாக சிறிலங்காவின் புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது குறித்து திணைக்களத்தின் பொது முகாமையாளர் கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கத்தினால் திணைக்களத்திற்கு வழங்கப்படுகின்ற நிதி புகையிரத செயற்பாடுகளுக்கு போதுமானதாக இல்லை என்றும்,

தற்போது அரசாங்கத்திடமிருந்து வருடமொன்றிற்கு பத்தொன்பது மில்லியன் அமெரிக்க டொலர்களை திணைக்களம் பெற்று வருகின்ற போதிலும் இது உபகரணங்களை பேணுவதற்கும் ரயில் சேவைகளின் தரத்தினை உயர்த்துவதற்கும் போதியதாக இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

## அலங்கார மீனை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

அலங்கார மீனை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்வதற்கான திட்டமொன்றினை மீன்பிடி நீரியல் அமைச்சு ஆரம்பித்துள்ளது.

அமைச்சரவையின் மீன் ஏற்றுமதித் திட்டம் இனபாலங்கா கம்பனியுடன் கூட்டாக இணைந்தே மேற்கொள்ளப்படவுள்ளது.

மீன்பிடி நீரியல் அமைச்சர் சந்திரசேன விஜேசிங்க அண்மையில் இக்கம்பனியின் பிரதிநிதிகளுடன் இத் திட்டம் பற்றிக் கலந்தாலோசித்துள்ளார். இதன் போது இப் பிரதிநிதிகள் உள்நாட்டு அலங்கார மீன்பிடித் தொழிற்சாலைக்குத் தேவையான பயிற்சியையும் நிபுணத்துவத்தையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளனர். ஜப்பான் சந்தைகளில் மற்றையவகை மீனினங்களுடன் எமது உள்நாட்டு மீனினவகைகள் போட்டிபோடக் கூடியதாக உள்ளதை இக் கம்பனியினர் அவதானித்துள்ளனர்.

## 131 உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்கள் உடனடியாக இடமாற்றம்

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் 131 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். இதற்கான பரிந்துரையை பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ செய்துள்ளதாக பொலிஸ் சுயாதீன ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை விரைவில் பொலிஸ் மையங்களின் பொறுப்பதிகாரிகளும் இடமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## நடுநிலைமை குறித்த குற்றச்சாட்டுக்கு சபாநாயகர் மறுப்புத் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் சபாநாயகர் சபையில் பாரபட்சமாக நடந்து கொள்கின்றார் என்ற குற்றச்சாட்டிற்கு அவர்பலமான மறுப்புத் தெரிவித்திருக்கின்றார்.

ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணியின்கட்சித் தலைவர்களால் இக்குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருந்தது.

சபாநாயகரைச்சந்தித்து 'நடுநிலமை' காப்பதில்அவர் விடும் தவறுகள் குறைகளைச் சுட்டிக் காட்ட உள்ளதாக இக் கட்சித் தலைவர்கள் கடந்த வாரம் தெரிவித்திருந்தனர். அத்துடன் இக்குற்றச் சாட்டிற்குசாதகமான பதிலைஅளிக்காவிட்டால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்போவதாகவும்அவர் கூறியிருந்தார்.

இக் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள சபாநாயகர் டபிள்யூ ஜே.எம்.லொக்குபண்டாரதான் தனது மனச்சாட்சியின் படியே செயற்பட்டு வருவதாகவும் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டது. முதல் தான் ஒரு 'அரசியல் உருவமாக' இருந்ததில்லை என்றும் தெரிவிப்பதுடன் இக்குற்றச் சாட்டுக்களை உத்தியோக பூர்வமாக தனக்கு எவரும் அறிவிக்கவில்லையென்றும் கூறியுள்ளதாக" சன்டேலீடர்' செய்தியொன்று கூறுகின்றது.

### -ரத்தின சிறீ விக்கிரம நாயக்க கலந்து கொண்ட

## நிகழ்வைப் படம் பிடித்ததாகக் கூறி அப்பாவித் தமிழ் இளைஞன் கைது

(கொழும்பு)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்தின சிறிவிக்கிரமநாயக்க கலந்து கொண்ட வைபவ மொன்றை வீடியோப் படம் எடுத்ததாகக் கூறி அப்பாவித் தமிழ் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெள்ளவத்தையில் அமைச்சர் கலந்து கொண்ட வைபவம் இடம் பெற்ற விகாரை வளவிற்குச் சமீபமாகவுள்ள தொடர்மாடித் தொகுதி வீடொன்றிலிருந்தே இளைஞர் வீடியோப் படம் பிடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார்.

உறவினரின் திருமண வீட்டிற்கு யாழ்ப்பாணத்திலிருந்து வந்துள்ள இளைஞர் அந்த வீட்டிலிருந்த புதிய வீடியோக் கமராவை எடுத்து யன்னல் வழியாக அதை இயக்கிப் பார்த்த போது அமைச்சரின் பாதுகாப்பிற்காக அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த அதிரடிப்படைப் பொலிசார் அதனை அவதானித்துள்ளதுடன் மாடிக்கு வந்து இளைஞரைக் கைதுசெய்து வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்திற்கு அந்த வீடியோக் கமராவுடன் அழைத்துச் சென்று தீவிர விசாரணைக்கு உட்படுத்தியதுடன் வீடியோக் கமராவையும் இயக்கிப் பார்த்துள்ளனர். அமைச்சரின் வைபவம் தொடர்பாக அதில் எதுவும் பதியப்படாமல் இருந்ததால் வாக்குமூலம் பெற்ற பின்னர் இளைஞர் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.

### -மன்னார் வைத்தியசாலைக்கு-

## புதிய மின் விசிறிகளை வழங்க பிரஜைகள் குழு இணக்கம்

(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலை விடுதிகளில் உள்ள மின் விசிறிகள் நீண்டகாலமாக திருத்தப்படாது பழுது பட்ட நிலையிலேயே உள்ளன.

இது குறித்து மாவட்ட வைத்திய அதிகாரி அவர்கள் மன்னார் பிரஜைகள் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்ததை அடுத்து பிரஜைகள் குழு புதிய மின் விசிறிகளை வாங்கிக் கொடுக்க இணங்கியுள்ளது. (மி)

## பேருந்து தரிப்பு நிலையத்திற்கு மன்னாரில் அடிக்கல் நாட்டல்

(மன்னார்)

மன்னாரில் தனியார் பேருந்து தரிப்பு நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றுள்ளது.

தனியார் போக்குவரத்துச் சங்கத்திற்கு அருகே இந்த அடிக்கல்லை முன்னாள் தனியார் போக்குவரத்து சங்கத் தலைவர் கிறிஸ்ரிகுரூஸ் நாட்டிவைத்தார்.

முன்னாள், தற்போதைய சங்க உறுப்பினர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (மி)

# மட்டக்களப்பில் புலிகளின் பகுதியில் படையினர் திடீர் தேடுதல் நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நேற்று முன்தினம் காலை விடுதலைப்புலிகளின் பாதுகாப்பு இடங்கள் எனக் கூறப்படும் பகுதிகளில் திடீர் தேடுதல் நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸார், அதிரடிப்படையினர் விமானப்படையினர், இராணுவத்தினர் என 400 இற்கும் மேற்பட்ட படையினர்இந்தத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்தப் படைகளின் அவசரத் தேவைகளுக்கு ஒத்துழைப்பு .வழங்க மேலுமொரு குழு தயாராக வைக்கப்பட்டிருந்ததாகவும் படைத்தரப்பு அதிகாரியொருவர் தெரிவித்தார். இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தகவல் ஒன்றையடுத்து மட்டக்களப்பு நகரை அண்மித்த பகுதிகளிலுள்ள விடுதலைப்புலிகளின் தளங்களை இலக்குவைத்தே மேற்படி தேடுதல் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் அடையாளம் காணப்பட்ட அந்த இடங்களிலிருந்து விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களைக் கைதுசெய்ததாகவோ அல்லது ஆயுதங்களை கண்டு பிடித்ததாகவோ எதுவும் தெரியவில்லை. இந்த நடவடிக்கைக்கு அதிரடிப் படையினர் பாரிய பங்களிப்பைச் செய்திருந்தனர். திட்டமிட்டபடி மட்டக்களப்பு நகர் மற்றும் நகரை அண்டிய பகுதிகளில் படையினா பொதுமக்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டனர் என்றும் அந்தப் படை அதிகாரி குறிப்பிட்டார்.

# எயிட்ஸ் நோய்க்கிலக்காகிய 43 பேர் வடக்கு-கிழக்கில்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுமார் 500 பேர் எயிட்ஸ் காவிகளாக இருக்கலாமென அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்குப் பகுதியில் கடந்த ஏழு வருடங்களில் 43 பேர் எயிட்ஸ் நோயாளிகளென அடையாளம் காணப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாலியல் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு அதிகாரி டாக்டர் எஸ். அருளானந்தம் தெரிவித்துள்ளார்.

இவரது தகவலின் படி யாழ்ப்பாணத்தில் 20 பேரும், கிளிநொச்சியில் 2பேரும் வவுனியாவில் ஒருவருமென வடக்கில் 25 பேர் எயிட்ஸினால் பீடிக்கப்பட்டுள்ளனர். இதேநேரம் மட்டக்களப்பில் 7பேர் அம்பாறையில் 5பேர் திருகோணமலையில் ஆறு பேர் என கிழக்கில் 18 பேரும் எயிட்ஸினால் பீடிக்கப்பட்டுள்ளனர். இலங்கை முழுவதிலும் அடையாளம் காணப்பட்ட 623 பேரில் 118 பேர் உயிரிழந்துள்ளனர்.


## காணிகள் விற்பனைக்குண்டு

767 இலக்கத்தையுடைய மூன்று ஏக்கர் வயல் காணியும், 767 இலக்கத்தையுடைய இரண்டேக்கர் மேட்டுக் காணியும்,நிரந்தரப் பயிர்களுடன் கிணறு, மலசலகூடம் வீட்டுடன் வீட்டுக்குரியதளபாடங்கள் விற்பனைக்குண்டு விலை பேசித் தீர்க்கலாம்.

க.சி.குமாரசாமி,
இல-767
ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி.

(5168)


## நீங்காத நினைவில்

1ஆம் ஆண்டில் 9ஆம் ஆண்டில்





செல்வி
அலோசியஸ் அஜந்தா (ரோபினா)

| | |
|---|---|
| அன்னைமடியில் | 08 - 11 - 1981 |
| இறைவன் அடியில் | 26 - 10 - 2003 |

அன்ரனி அலோசியஸ்
(துணைப்படை)

| | |
|---|---|
| தோற்றம் | 15 - 07 - 1930 |
| வீரச்சாவு | 11 - 09 - 1995 |

ஓராண்டு ஆனதம்மா உனைப்பிரிந்து ஒன்பதாண்டு ஆனதையா உனைப்பிரிந்து
ஆறவில்லை துயரம்
இன்னும் மாறவில்லை - விழிகளில்
நீரோடு நிற்கிறது உங்கள் நினைவு
நூறாண்டு ஆனாலும் மாறாது உங்கள் துயரம்

த.முகவரி:
கோயிற்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

நி.முகவரி:
கொக்கிளாய்.

உங்கள் பிரிவில் துயருறும்
குடும்பத்தினர், உறவினர்,
நண்பர்கள்.

(5217)


## சமையலாளர்/மேற்பார்வையாளர்கள் தேவை

- தரமாகவும், சுவையாகவும் உணவுகள் தயாரிப்பதற்கு சமையலாளர்/ சமையல் மேற்பார்வையாளர்கள் தேவை.
- சான்றிதழ்கள் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- உணவு, தங்குமிடம், சுகாதாரவசதிகள் இலவசம்.
- உள்நாட்டு உணவுகள் மட்டுமே தயார்படுத்தப்படல் வேண்டும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நேர்முகத் தேர்வுகள் ஒக்டோபர் மாதம் 30 ஆம், 31ஆம் திகதிகளில் காலை 9.00-3.00 மணிவரை இடம் பெறும் விண்ணப்பதாரிகள் கீழுள்ள விலாசத்திற்கு முன்பும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகட்கு
R.ஜெகன்
131/1 ஸ்ரேசன் றோட் .வைரவபுளியங்குளம்.வவுனியா
TEL:024-2221593

(சி-10284)


## வவுனியா மாவட்டக்கூட்டுறவுச்சபை

மேற்படி சபையின் மாவட்டச் செயலாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

### மாவட்டச் செயலாளர் பதவி

மேற்குறிப்பிட்ட பதவி சம்பந்தமாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01.பதவி:- மாவட்டச்செயலாளர்

02. சம்பள அளவுத்திட்டம்:- 5,500.00-8,200.00
130X10+140X10

03.தகைமை:-

a. கூட்டுறவு ஊழியர் எட்டாவது சம்பள அளவுத்திட்டத்தில் முகாமைத்துவ மட்டத்திலான பதவியில் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் ஒன்பதாவது சம்பள அளவுத்திட்டத்தில் அலுவலக உதவியாளர்/ அங்கத்துவ உறவு உத்தியோகத்தர் பதவியில் ஆறு வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது

b. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டமோ அதற்கு சமமான தகைமைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வாணிப தொழில் நுட்ப ஸ்தாபனத்தில் அலுவலக முகாமைத்துவம்/ செயலாளர் நடவடிக்கைகள்/ பொதுமக்கள் உறவுகளில் ஆறு வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது

c. பட்டய செயலாளர்களின் மற்றும் நிர்வாகத்தர்களின் ஸ்தாபனத்தில் தொடர்புடைய அங்கத்துவம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வாணிபம்/ தொழில் நுட்ப ஸ்தாபனத்தில் செயலாளர் வேலைகள் தொடர்பாக ஆறு வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது.

d. செயலாளர் நடவடிக்கைகள் தொடர்பாக நாலு வருடங்களுக்குக் குறையாத அனுபவத்துடன் சட்டத்தரணியாக இருத்தல் அல்லது

e.கூட்டுறவு ஊழியர் [உயர்தர] அத்தாட்சிப்பத்திரம், கல்விப்பொதுத்தராதரப்பத்திர [உயர்தர] மூன்று பாடங்களில் சித்தி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வாணிப, தொழில்நுட்ப ஸ்தாபனத்தின் அலுவலக முகாமையாளராக/ பணிப்பாளர் சபையின் செயலாளராக/ பொதுமக்கள் உறவு உத்தியோகத்தர் பதவி ஆகியவற்றில் எட்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

04. வயதெல்லை:-25-45இற்கும் உட்பட இருத்தல்.

ஏனைய விபரங்கள்

01.சபையினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களை மாத்திரம் பூர்த்திசெய்து பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவங்களையும் ஏனைய விபரங்களையும் பெற்றுக் கொள்வதற்காகத் தங்களுடைய பெயர் முகவரி எழுதப்பட்ட 9"X4"அளவிலான முத்திரைக்கடித உறை ஒன்றை 10.11.2004 திகதிக்கு முன்னர் கீழ்க்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்புவதன் மூலமோ அல்லது நேரடியாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

02. விண்ணப்ப முடிவுத்திகதி:-18.11.2004

03. தற்போது கூட்டுறவுச்சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிக்காக விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் ,விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுத்துமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.

தலைவர்
வவுனியா மாவட்டக் கூட்டுறவுச்சபை,
ஸ்ரேசன்வீதி,வவுனியா.

(சி.10285)

## 9 ஆம் ஆண்டு நினைவுநாள்

| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 20 | 26 |
| 04 | 10 |
| 1967 | 1995 |



### லெப்-நீலவர்ணன்

(ஐயம்பிள்ளை மனோகரன்)

தாயக மீட்பில் உன்னைப் பிரிந்து
ஒன்பது ஆண்டுகள் ஓடிவிட்டன
ஆனாலும் உன் நினைவுகள்
எம்மை விட்டுப் பிரியப்போவதில்லை.

ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி.

(5223)

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

-இலங்கை வரப் போகின்றனராம்-

# இராமேஸ்வரத்தில் மீனவர் படகுகளில் வெள்ளைக்கொடிகள்ஏற்றப்பட்டன

(சென்னை)

**இராமேஸ்வரம் மீனவர்களால் கடந்த இருபது நாட்களுக்கு மேலாக நடாத்தப்படும் வேலைநிறுத்தப்போராட்டத்தின் இறுதிக்கட்டப் போராட்டமாக வெள்ளைக்கொடி கட்டியபடகுகளில் இலங்கைக்குச் செல்லப் போவதாக மீனவர்கள் அறிவித்துள்ளனர். இதற்கமைய கடற்கரையில் கட்டிப்போடப்பட்டிருக்கும் படகுகளில் வெள்ளைக் கொடிகளைக் கட்டும் பணியை ஆரம்பித்துள்ளனர்.**

இராமேஸ்வரம் மீனவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று 21 ஆவது நாளாக தொடர்ந்துவருகிறது.

இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும். கச்சதீவுப் பகுதியில் மீன் பிடிக்கும் பாரம்பரிய உரிமையை மீட்டுத் தரவேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் நிறுத்தி இராமேஸ்வர மீனவர்கள் கடந்த 5 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தினை நடாத்தி வருகின்றனர்.

இதனிடையே வெள்ளைக் கொடிகட்டிய படகுகளில் இலங்கைக்கு குடும்பத்துடன் செல்வது என இராமேஸ்வர மீனவர்கள் முடிவு செய்துள்ளனர். இதற்காக 200 இற்கு மேற்பட்ட படகுகளில் வெள்ளைக் கொடி கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டதையடுத்து இராமேஸ்வரப் பகுதியில் மிகுந்த பரபரப்பு நிலவிவருகின்றது.

இதேவேளை இராமேஸ்வரப் பகுதி மீனவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக தஞ்சை, நாகை, புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களும் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

-வி.பி.சிங் ஆறாவது வழக்கு-

# சந்திரா சுவாமி நிரபராதி எனத் தீர்ப்பு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களுக்கு அவப்பெயரை உண்டாக்குவது தொடர்பான சதியொன்றில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நடைபெற்ற வழக்கில் இந்து மத சாமியார் சந்திராசுவாமி நிரபராதி என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது

சந்திராசுவாமிக்கு எதிராக தடயங்கள்எதுவும் இல்லையென நீதிபதி கூறியிருக்கின்றார். வி.பி.சிங்கின் மகன் ஊழல் புரிந்தார் என்பதாகக் காட்டும் ஆவணங்களைப் போலியாக உருவாக்கிமுன்னாள் பிரதமர் மீது களங்கம் கற்பிக்க முயன்றதாக சந்திராசுவாமி முன்னாள்மூத்த அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள்மீது வழங்கு தொடுக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இன்னொரு முன்னாள் பிரதமரான பி.வி.நரசிம்மராவ் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இல. இனப்பிரச்சினைக்கான தீர்வில்இந்தியாவின் பங்களிப்புக் குறித்துஆராயும் மாநாடு

## சுப்பிரமணிய சுவாமி கூட்டுகிறார்

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியாவின் பங்களிப்புக்கள் தொடர்பாக ஆராயும் விசேட மாநாடு இவ்வார இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் இலங்கை சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மற்றுமொருவரும் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 30ஆம் திகதி புதுடில்லியில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் மொத்தமாக 35 பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளதாகவும், சீனா, இஸ்ரேல், நேபாளம், பங்களாதேஷ் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளின் பிரதிநிதிகளும் பங்குபற்றவுள்ளதாக இந்திய முன்னாள் அமைச்சர் கலாநிதி சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணும் விடயத்தில் அண்டை நாடான இந்தியாவின் பங்களிப்புக்கள் தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதனைவிட இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்கள் சர்வதேச சமூகத்தின் பங்களிப்புக்கள் குறிப்பாக, சார்க் நாடுகள், அமெரிக்கா, சீனா மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளின் பங்களிப்புக்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர் மீதான தாக்குதல் குறித்து

# சந்திரிகா–மன்மோகன்சிங் பேசிமுடிவெடுப்பர்

(புதுடில்லி)

தமிழ் நாட்டு மீனவர் மீது தொடரும் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல் தொடர்பாக அடுத்த மாதம் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள சனாதிபதி சந்திரிகாவுடன் பேசி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் முடிவெடுப்பார் எனத் திராவிட முன்னேற்றக் கழகப்பொதுச்செயலர் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

ராஜ்பவனில் வைத்து மன்மோகன் சிங் திராவிட முன்னேற்றக் கழகப் பிரதிநிதிகளுடன் மீனவர்களுடைய பிரச்சினை பற்றிக் கதைக்கும் போது அவர் இத்தாக்குதலை தடுப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கட்சியின் மாநிலத் தேர்தல்களை விரைந்து நடத்த சோனியா பணிப்பு

ஏப்ரல் 30 ஆம் திகதிக்குள் ஒவ்வொரு மாநிலத்திலும் கட்சித் தேர்தலை நடத்தி முடிக்கும்படி மாநில காங்கிரஸ் தலைவர்களுக்கு சோனியா கட்டளையிட்டார். மாநிலத் தலைவர்கள் கூட்டம் அனைத்து மாநில காங்கிரஸ் தலைவர்கள் கூட்டம் டில்லியில் உள்ள அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. கட்சியின் தலைவர் சோனியா காந்தி தலைமை தாங்கினார். கட்சியின் மாநிலப் பொதுச்செயலாளர்களும் இதில் பங்கேற்றனர். பாதுகாப்பு அமைசசில் மூத்த காங்கிரஸ் தலைவருமான பிரணாப்முகர்ஜியும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். கூட்டத்தைத் தொடக்கி வைத்து பேசிய சோனியா காந்தி அடுத்த வருடம் சில மாநிலங்களில் சட்ட சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னதாக ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்குள் அனைத்து மாநிலங்களிலும் கட்சி அதிக உறுப்பினர்களைச் சேர்த்து நிர்வாகிகள் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும். பெண்கள், தாழ்த்தப்பட்டோர் மலை சாதியினர். பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரை அதிக அளவில் உறுப்பினர்களாகச் சேர்க்கமுயற்சி எடுக்க வேண்டும். உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியை ஒரு மாதத்திற்குள் முடிக்கவேண்டும் என்று மாநிலத் தலைவர்களுக்கு உத்தர விட்டார்.

தமிழக காங்கிரஸ் தலைவர் ஜி.கே வாசன் பேசும் போது தமிழகத்தில் உறுப்பினர்கள் சேர்க்கும் பணி கடந்த 4 ஆம் திகதி தொடங்கி விட்டது. நவம்பர் 13ஆம் திகதி வரை தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உறுப்பினர்களைச் சேர்க்கும் பணி தொடர்ந்து நடைபெறும் என்று கூறினார்.

# வீரப்பன் கொல்லப்பட்டமை குறித்து வெள்ளை அறிக்கை விடவேண்டும்!

## தமிழக அரசிடம் திருமாவளவன் கோரிக்கை

(சென்னை)

சந்தனமரக் கடந்தல் வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரம் குறித்து மாநில அரசு வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுச்சேரியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் வீரப்பனின் மரணம் பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது என்றும் இந்த சந்தேங்களைப் போக்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது என்றும் கூறியுள்ளார்.

-மகாராஷ்ரா மாநில அமைப்பு-

# காங்கிரஸ் தேசியவாத காங்கிரஸ் இழுபறி இன்றும் தீரவில்லை!

(புதுடில்லி)

மகாராஷ்டிர மாநிலத்தில் முதலமைச்சர் பதவிக்குப் பதிலாக மூன்று கூடுதல் அமைச்சர்களையும் இரண்டு இலாக்காப் பொறுப்புக்களையும் அளிக்க காங்கிரஸ்கட்சி முன்வந்துள்ளது குறித்து முடிவெடுப்பதை தேசிய வாத காங்கிரஸ் கட்சி தள்ளிவைத்துள்ளது. புதுடில்லியில் நேற்று மாநில முதலமைச்சர் பதவி குறித்து ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை பற்றி தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவாருடன் பேச்சு நடாத்திய பின்னர் கட்சியின் மூத்த தலைவர்கள் பிரகூல்படேல், டி.பி.கிருபாதி ஆகியோர் இத் தகவலைத் தெரிவித்தனர். காங்கிரசின் இந்த யோசனை தங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை என அவர்கள் தெரிவித்தனர். முன்னதாக நேற்று மும்பையில் கூடியதேசியவாதகாங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் அடுத்த அரசை அமைப்பது தொடர்பாகவும் சட்டப்பேரவைக் கட்சித் தலைவரை தேர்வு செய்வது குறித்தும், முடிவெடுக்கும் அதிகாரத்தை கட்சியின் தலைவர் சரத்பவாருக்கு வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இதனிடையே காங்கிரஸ் கட்சியின்சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டமும் நேற்று மும்பையில் நடைபெற்றது. சட்டப் பேரவைக் கட்சித் தலைவரை தேர்வு செய்வது, ஆட்சி அமைப்பது குறித்து முடிவெடுப்பது ஆகியஅதிகாரங்களை காங்கிரஸ் தலைவி சோனியாகாந்திக்கு வழங்கி ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# வீரப்பன் சுட்டுக் கொல்லப்படவில்லை தற்கொலை செய்து கொண்டார்

## - மனைவி முத்துலட்சுமி நம்பிக்கை

(சென்னை)

வீரப்பன் தமிழக பொலிசாரினால் கொல்லப்படவில்லை. அவர் தற்கொலை செய்து கொண்டு இறந்திருக்கலாமென்றெ நம்புகிறேன். என வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி தெரிவித்துள்ளார். மேலும் இச் சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணையகத்தை அணுகப்போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சந்தனக்கடத்தல் வீரப்பனும் அவனது சகாக்கள் மூன்று பேரும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் தொடர்பான விசாரணைகள் தற்போது இடம் பெற்று வருகிறது. இந்த நான்கு பேரும் வெவ்வேறு சமயத்தில் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் பரவலாக நிலவுகின்றது.

இதற்கிடையில் இச் சம்பவம் குறித்து அரசு விசாரணைக்குட்படுத்தப்பட்டு விசாரணை தொடங்கியுள்ளது. வீரப்பன் தொடர்பான வழக்கில் விசாரணை அறிக்கை மிக முக்கியம் என்பதால் இதில் சிறிய விவகாரத்தையும் விட்டுவிடக் கூடாது என்பதில் அதிகாரிகள் தீவிரமாக உள்ளனர்.

வீரப்பன் பயணம் செய்த வானில் இருந்த கமராவும் முக்கிய சாட்சியமாக எடுத்துக் கொள்ளப்படுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில்வீரப்பன் கொல்லப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்த தினத்தில் மாலை 5.00 மணியளவில் மலைக்கிராமத்தில் அம்பியுலன்ஸ் வாகனத்தையும் பொலிஸ் ஜீப்பையும் பார்த்ததாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் வீரப்பன் தற்கொலை செய்து கொண்டதாக வெளியான செய்திகளை அதிரடிப்டைத்தலைவர் விஜயகுமார் மறுத்துள்ளதுடன் வீரப்பன் அதிரடிப்படை பொலிசாரினால் தான் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார் என்றும் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.


வாய்ப்புக் கிடைத்தால் தேர்தலில் போட்டியிடுவேன் என்று சந்தனமரக்கடத்தல் வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி கூறியுள்ளார். பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது;

வீரப்பன் என் புருஷனாக இருப்பினும் அவர் செய்தது தவறுதான். அதற்கான தண்டனை அவருக்கு கிடைத்து விட்டது. அதை நான் நியாயப்படுத்தவோ, பெரிது படுத்தவோ விரும்பவில்லை. வீரப்பனை பிடிக்க வேண்டும் என்பதற்காக நான் உட்பட எனது உறவினர்களை அதிரடிப் படையினர் அடித்து உதைத்து சித்திரவதைக்கு ஆளாக்கினார்கள் என்மீதும் என்னுடைய உறவினர்கள் மீதும் போடப்பட்டுள்ள எல்லா வழக்குகளையும் தமிழகம் மற்றும் கர்நாடக அரசு உடனடியாக வாபஸ் பெறவேண்டும் கடந்த பத்து ஆண்டுகளாக முடக்கி வைக்கப்பட்டுள்ள என்னுடைய உடமைகளையும், சொத்துக்களையும் என்னிடம் திருப்பி ஒப்படைக்க வேண்டும். உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளதால் நான் இனி உழைத்துப்பிழைக்க முடியாத நிலையில் இருக்கிறேன்.

எனவே அரசுதான் எனக்கு எல்லா உதவிகளையும் செய்து தரவேண்டும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# முக்கியத்துவம் வாய்ந்த நாக்பூர் டெஸ்ட் இந்திய–அவுஸ். அணிகள் இன்று களத்தில்





இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று நாக்பூரில் ஆரம்பமாகின்றது.

ஏற்கனவே நிறைவடைந்த இரண்டு டெஸ்ட் போட்டியில் ஒன்றில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரில் 1-0 என்ற நிலையில் முன்னணி வகிக்கின்றது.

முக்கியமாக இப்போட்டியில் சச்சின் டெண்டுல்கர் விளையாடுகின்றார். அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்து பெரிதாக மாற்றம் எதுவும் இல்லை. பிரெட்லீ பன்னிரெண்டாவது வீரராக இணைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் நாளைய போட்டியில் ஹர்பஜன்சிங் பங்கேற்பது ஐம்பது வீதமே உள்ளது. அவர் வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளார்.

எது எவ்வாறிருப்பினும், இப்போட்டி ஒரு முக்கியமான போட்டியாக அமையவுள்ளதுடன் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றால் தொடரைக் கைப்பற்றிய பெருமையைப் பெற்றுவிடும்.

# நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் ஹபிபுல் பசார் பங்கேற்கமாட்டார்

இன்று சிட்டகொங்கில் ஆரம்பமாகும் நியூசிலாந்து அணியுடனான 2ஆவது போட்டியில் பங்களாதேஷ் அணித்தலைவராக ஹபிபுல்பசார் விளையாடமாட்டார்.

இவரின் இடத்துக்கு விக்கட் காப்பாளர் காலித்மசுத் நியமிக்கப்பட்டு அணியை வழிநடத்தவார். பசார் டெஸ்ட் போட்டிகளில் அதிகமாக 2079 ஓட்டங்களைப்பெற்ற வீரராவார். இப்போட்டிக்கு இரு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஹனான் சார்கர், அலாம்சிற் கபிர் ஆகியோர் நீக்கப்பட்டு அப்டாப் அகமட், இனாமுல்ஹக் ஆகியோர் இணைக் கப்பட்டுள்ளனர்.

31 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்ற பங்களாதேஷ் 28 போட்டிகளில் தோல்வியைத் தழுவியுள்ளது.

2ஆவதும்இறுதியுமான போட்டி முடிந்ததும் 3 ஒருநாள் போட்டிகள் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.




## நூறாவது போட்டியில் மெக்ராத்



இன்று நாக்பூரில் ஆரம்பமாகும் இந்தியாவுக்கெதிரான போட்டி அவுஸ்திரேலிய வீரர் கிளன் மெக்ராத்தின் 100ஆவது டெஸ்ட் போட்டியாகும். இதனை அவர்கொண்டாடுகிறார்.100ஆவது டெஸ்ட் போட்டிகளில் விளையாடி பந்து வீச்சாளர்கள் வரிசையில் மெக்ராத் 3 ஆம் இடத்தைப் பெறுகிறார்.

முதலாவது இடத்தை மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கொட்னி வோல்ஷும் 2ஆம் இடத்தை பாகிஸ்தான் வீரர் வசீம் அக்ரமுடம் பெறுகின்றார். போட்டி ஒன்றில் 5 விக்கெட்டுக் களைப்பெற்றது பெருமை என்றாலும் 10 விக்கெட்டுக்களை வீழ்த்துவது அதனிலும்பெருமை என்று கூறிய அவர் துடுப்பாட்டத்தில் 50ஓட்டங்களைப் பெறுவது தனது முக்கிய குறிக் கோள் என்று தெரிவித்துள்ளார். மெக்ராத் 1993 ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் இணைந்தார்.

## எஞ்சியுள்ள இரண்டு டெஸ்ட் போட்டியையும் அவுஸ்திரேலிய அணி கைப்பற்றும்

### ரிக்கிபொண்டிங்



இந்தியாவுக்கு எதிராக எஞ்சியுள்ள இரண்டு டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்திரேலியா வெற்றி பெறும் என்று அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

சென்னை போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ள நிலையில் மூன்றாவது டெஸ்ட் போட்டி நாக்பூரில் இன்று ஆரம்பமாகின்றது.

இந்தப் போட்டிக்காக இரு அணிவீரர்களும் நாக்பூரில் வலைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடாத ரிக்கிபொண்டிங் நேற்று முன்தினம் நாக்பூர் சென்றார். பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்த பொண்டிங்-மும்பை டெஸ்டில் தான் விளையாட இருப்பதாக கூறினார்.ஆனால் தமக்கு பதில் அணியில் இருந்து யார் நீக்கப்படுவார் என்பது மிகவும் சிக்கலான கேள்வி என்று பொண்டிங் தெரிவித்தார்.

## அதிக ஒருநாள் போட்டியில் பங்கேற்றதே முதலாவது டெஸ்ட் தோல்விக்குக் காரணம்

### பொப்வூல்மர்



பாகிஸ்தான் அணி சிறிலங்காவிடம் முதலாவது டெஸ்ட் போட்டியில் படுதோல்வியடைந்தமை தொடர்பாக பயிற்றுனர் பொப்வூல்மர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் பாகிஸ்தான் அணி 16 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றுள்ளமை மிக அதிகம் என்றும் அதனா லேயே அது முதலாவது டெஸ்டில் தோல்வி யடைந்தது எனவும் றியுள்ளார். எனினும் இத னைத்தான் மன்னிக்க முடியாது என்றும் கூறிய வூல்மர் போட்டியில் முதல் இன்னிங்சில் சிறிலங்கா வுக்கு நெருக்கடியைக் கொடுத்தாலும் 2ஆவது இன் னிங்சில் ஜயசூரியாவை வீழ்த்த முடியாமற் போனதே தோல்விக்குக் காரணம் என்றார்.இது அவர் பணிக்குவந்தபின்பு நடைபெறும் முதலாவது போட்டி என்றும் இனிவரும் போட்டிகளில் வீரர்கள் கவனம் எடுப்பார்கள் என்றும் தெரிவித்தார்.

## சர்வதேச அமைப்புக்குக்

ஊக்கமருந்து சர்ச்சை தொடர்பாக, நியாயமான விசாரணை நடத்தும்படி சர்வதேச பளுதூக்குதல் கூட்டமைப்புக்கு பிரதிமா குமாரி கடிதம் எழுதியுள்ளார்.சமீபத்தில் நடந்த எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்திய பளுதூக்குதல் வீராங்கனைகளான பிரதிமா குமாரி,சனமாச்சா சானு ஊக்க மருந்துச் சோதனையில் சிக்கினர். இவர்கள் இருவரும் தடைசெய்யப்பட்ட மருந்துப் பொருளை உட்கொண்டது தெரிய வரவே போட்டியில் இருந்து நீக்கப்பட்டனர். இதை எதிர்த்து பிரதிமா சார்பில் டில்லி ஐகோர்டில் ரிட்மனு தாக்கல் செய்யப்பட்டது. இதில் இழப்பீடாக ரூ.5 கோடி வழங்க வேண்டும் எனக் கோரியிருந்தார். இதில் தான் நிரபராதி என்றும் ஊக்கமருந்து எதுவும் உட்கொண்டதில்லை என்றும் விளக்கம் அளித்துள்ளார். இப்பிரச்சினை பற்றி விரிவான விசாரணை நடத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## நாக்பூர் போட்டியில் சச்சின் விளையாடுவது இந்திய அணிக்கு உத்வேகமானது

### ஜோன்ரைட்



இன்று ஆரம்பமாகும் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் நடுத்தர வரிசை ஆட்டக்காரர்கள் சிறப்பாக துடுப்புபெடுத்தாடுவார்கள் என்று இந்திய அணியின் பயிற்சியாளர் ஜோன்ரைட் தெரிவித்துள்ளார்.கடந்த இரண்டு போட்டிகளில் விளையாடாத சச்சின் டெண்டுல்கர் நாக்பூர் போட்டியில் விளையாட இருப்பது இந்திய அணிக்கு

## டெஸ்ட் கிரிக்கெட் தரப்படுத்தல் ராவிட், ஹார்மிஷன் முதலிடத்தில்



டெஸ்ட் கிரிக்கெட் தரப்படுத்தலில் துடுப்பாட்டத்தில் இந்தியாவின் ராகுல் ராவிட் 877 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

இரண்டாம் இடத்தில் அவுஸ்திரேலியாவின் மத்யூஹெய்டன்



உள்ளார். மூன்றாவது இடத்தில் வீரேந்திர ஷேவாக் தரமுயர்ந்துள்ளார். நான்காவது இடத்தில் பிரைன் லாறா, ஐந்தாவது இடத்தில் ரிக்கி பொண்டிங், ஆறாவது இடத்தில் ஜக் கலிஸ், ஏழாவது இடத்தில் சச்சின், எட்டாவது இடத்தில் கிப்ஸ், ஒன்பதாவது இடத்தில் இன்சமாம் உல் - ஹக், பத்தாவது இடத்தில் கிரேம் சிமித் ஆகியோர் உள்ளனர்.

பந்து வீச்சில் தொடர்ந்தும் இங்கிலாந்தின் ஹார்மிஷசன் முதல் இடத்திலும், இரண்டாவது இடத்தில் முரளிதரனும், மூன்றாவது இடத்தில் ஷேன் பொலக்கும், நான்காவது இடத்தில் அக்தரும், ஐந்தாவது இடத்தில் மெக்ராத்தும், ஆறாவது இடத்தில் அனில் கும்ளேயும், ஏழாவது இடத்தில் ஷேன் வோர்னும், எட்டாவது இடத்தில் கிளெஸ்பியும் ஒன்பதாவது இடத்தில் சமிந்தவாசும், பத்தாவது இடத்தில் வாக்கார் யூனிஸும் உள்ளனர்.

# ஸ்கந்தா வி.கழகம் நடத்திய கால்பந்துப்போட்டி; சம்பியனானது விக்கினேஸ்வரா அணி

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக்கழகத்தினரால் நடாத்தப்பட்ட கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில்புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் வெற்றிக் கிண்ணத்தை சுவீ



விக்னேஸ்வரா அணி

கரித்துக்கொண்டது.

கடந்த 22-10-2004 நாள் ஆரம்பமான இக்கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி நேற்று மாலை 3.00 மணிக்கு ஆரம்பமானது.

இதில் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக அணியினை எதிர்த்து முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இரு அணிகளும் மிகவும் சமபலத்துடன் ஆடி இடைவேளைக்குப் பின் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக அணியினர் ஒரு



விநாயகர் அணி

கோலைப் போட்டனர்.


ஸ்கந்தபுரத்தைச்சேர்ந்த இராமநாதன் பசுபதி, பசுபதி செந்தூரன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்காக நடைபெற்ற இப்போட்டியில் கிளி.,முல்லை மாவட்டத்தைச்சேர்ந்த 25 அணிகள் கலந்துகொண்டன. போட்டியின் ஆட்ட நாயகனாக விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த பிரகாஸ் தெரிவானார். சிறந்த அணியாக கோணாவில் இளைஞர் விளையாட்டுக்கழகம் தெரிவானது.

இப்போட்டிகளில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா,கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா உட்பட விளையாட்டுத்துறை அதிகாரிகள் மதகுருக்கள் எனப்பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ச, தீ)

## மாவீரர் வெற்றிக் கிண்ண கால்பந்துப் போட்டி விண்ணப்பிக்கக் கோரிக்கை

2004 ஆம் ஆண்டு மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான கால்பந்தாட்டப்போட்டி தமிழீழ விளையாட்டுத்துறையினரால் நடத்தப்படவுள்ளது.

2004ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் நடைபெறவுள்ள மாவீரர் வெற்றிக்கிண்ணத்திற்கான கால்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கிளிநொச்சி மாவட்ட அணிகளை கிளிநொச்சி தமிழீழ விளையாட்டுத்துறைச் செயலகத்தில் 3.11.2004 நாளிற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். இப்போட்டிகள் பிரதேச ரீதியாக நடைபெற்று வெற்றியீட்டும் அணிகளுக்கான போட்டி கிளிநொச்சி மத்தியவிளையாட்டு மைதானத் தில் நடைபெறுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச.தீ)



## சிந்தனைக்கு

சிங்களப் பேரினவாதத்தின் தீவிரவாதப் போக்கில் மாற்றம் ஏற்படும் என நான் என்றுமே நம்பியதில்லை; அந்த மாற்றம் ஏற்படாத வரை தமிழருக்கு நீதி கிடைக்கப்போவதில்லை

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 26-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

# ஏற்கத் தேவையற்றது

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக சனாதிபதி சந்திரிகா விரைவில் முக்கிய அறிவிப்பொன்றை வெளியிடுவார் எனவும், இவ் அறிவிப்பில், ஒஸ்லோ பிரகடனத்திற்கு உட்பட்டதான வகையில் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராக உள்ளதெனவும், அதற்கு முன்பதாக 'ஒஸ்லோ' பிரகடனத்திற்கு இசைவாகவே பேச்சுவார்த்தைகள் நடக்க வேண்டும் என்பதை தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் ஒரு பிரகடனம் மூலம் பகிரங்கப்படுத்த வேண்டும் எனக் கோருவர் எனவும் ஊடகத் தகவல்கள் மூலம் அறியவருகிறது.

சனாதிபதி சந்திரிகா, இத்தகையதொரு அறிவிப்பை வெளியிடுவாரேயானால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில், தம் பக்கமுள்ள பந்தை புலிகள் பக்கம் எறிந்துவிடுதல் போதும் என்ற நோக்கில் மட்டுமே செயற்படுபவராக இருக்க முடியும். ஏனெனில், சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அவர் புதியதொரு நிபந்தனையை விதிக்க முற்படுவதாகவே இது அர்த்தப்படும்.

2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் விடுதலைப்புலிகளுக்கும்–சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் நடந்த ஒஸ்லோ சந்திப்பில் சமஷ்டி முறை பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டது. இதன் பிரகாரம் இனப்பிரச்சினைத் தீர்விற்குச் சமஷ்டி முறையின் கீழ் தீர்வு காணபது தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இரு தரப்புமே இசைவு தெரிவித்தன.

இதேவேளை, இச்சந்திப்பின் நிறைவில் வழமைபோல் சமாதானப் பேச்சுவார்த்தை ஏற்பாட்டாளர்களான நோர்வேத் தரப்பினர் வெளியிட்டஅறிக்கையில் விடுதலைப்புலிகளும், சிறிலங்கா அரசாங்கத்தினரும் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறை ஒன்றின் மூலம் தீர்வு காண்பதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்கு இணங்கியுள்ளனர் எனத் தெரிவித்திருந்தனர்.

இதற்கு அப்பால், இவ் அறிக்கையில் பெரிதாக ஒன்றும் பேசப்படவில்லை. இருப்பினும் சிறிலங்கா அரச தரப்பு விடுதலைப் புலிகள் சமஷ்டி முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணச் சம்மதம் தெரிவித்து விட்டதாகப் பெரும் எடுப்பில் பிரச்சாரம் செய்தது. ஆனால், அடிப்படையில் இது இரு தரப்பினரும் இணைந்து வெளியிட்ட ஒரு பிரகடனமோ அன்றி இனப்பிரச்சினைத் தீர்விற்கான உடன்பாடோ அல்ல. தீர்விற்கான வழிமுறையாக சமஷ்டி முறையில் பரிசீலிக்க இரு தரப்பும் கொள்கையளவில் தெரிவித்த இணக்கமே.

ஏனெனில், இது ஒரு பிரகடனம் எனில் அதில், பல விதிகள் இடம்பெற்றிருத்தல் வேண்டும். பேச்சுவார்த்தையில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்பினரும் கையொப்பம் இட்டிருத்தல் வேண்டும். இதனைத் தவிர இப்பேச்சுவார்த்தைக்கு ஏற்பாட்டாளராக செயற்படும் நோர்வேத் தரப்பும், இருதரப்பினரும் கையொப்பம் இட்ட உடன்பாட்டில் கையொப்பம் இட்டிருத்தல் வேண்டும்.ஆனால் அவ்வாறு எதுவும் இன்றிச் சந்திப்பின் முடிவில் வெளியிடப்பட்ட அறிவிப்பைப் பிரகடனம் எனவும் அது விடுதலைப்புலிகளையும், தமிழ் மக்களையும் கட்டுப்படுத்தும் என எதிர்பார்ப்பதும் தவறான அர்த்தப்படுத்தலாகும். அவ்வாறு எதிர்பார்ப்பின் அதனால் பயன் ஏதும் கிட்டும் எனக் கூறிவிட முடியாது.

இது ஒரு புறம் இருக்க சிறிலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் எதையும் நடத்துவதற்கு முன்பாக வாக்குறுதிகளை வழங்குவதோ அன்றி உத்தரவாதங்களை வழங்கவேண்டிய தேவையோ, அவசியமோ தமிழர் தரப்பிற்கு இல்லை. ஏனெனில் வரலாற்றில் சிறிலங்கா அரச தரப்பு எவ்வேளையிலும் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றியதாகவோ, தமிழர் தரப்புடன் செய்துகொள்ளப்பட்ட உடன்பாடுகளை மதித்து நடந்ததாகவோ இல்லை.

ஆகையினால் சிறிலங்கா அரசாங்கத் தரப்புடன் பேச்சுவார்தை நடாத்தும் தமிழர் தரப்பு பேச்சுவார்த்தையில் காணப்படும் இணக்கப்பாடு அமுல்படுத்தப்படும் வரையில் அது குறித்து எத்தகைய உறுதிமொழிகளையும் வழங்கமுடியாது. அதாவது பேச்சுவார்த்தைக்கு அன்றி பேச்சுவார்த்தைக்குச் சம்மதிப்பதற்காகவோ, சம்மதித்துவிட்டதாகவோ அல்லது பேச்சுவார்த்தையின் முடிவில் உடன்பாடு ஒன்று எட்டப்படுவதினாலோ தமிழ்த்தரப்பு திருப்திப்பட்டு விடமுடியாது.

ஏனெனில் தொடங்கப்படவிருந்த பேச்சுவார்த்தைகள் கைவிடப்பட்டுள்ளன. தொடங்கிய பேச்சுவார்த்தைகள் குழப்பமடைந்துள்ளன. பேச்சுவார்த்தை மூலம் இணக்கம் காணப்பட்ட உடன்பாடுகள் கிழித்தெறியப்பட்டுள்ளன. இந்நிலையில் பேச்சுவார்த்தைகளின் பின்னரான எந்த நடவடிக்கைக்கும் முன்னரே வாக்குறுதியோ, உறுதிப்படுத்தலோ செய்வதென்பது தேவையற்றதொன்று.

ஆகையினால் கூட்ட அறிக்கை ஒன்றைப் பிரகடனம் என்றாக்கி அதன் அடிப்படையில் உத்தரவாதம் வழங்குமாறு வரலாற்றில் என்றுமே நம்பகத் தன்மையற்றவர்களாகச் செயற்பட்டவர்கள் உறுதி மொழி கோருவது அர்த்தமற்றதும் நியாயமற்றதும் ஆகும். இவர்கள் முதலில் தமிழ் மக்களின் அத்தியாவசியமானதும், அவசியமானதுமான, மனிதாபிமான பிரச்சினைகளைத்தீர்க்க முன் வருதல்வேண்டும். அதன் பின்னரே இறுதித் தீர்வு பற்றிப் பேசலாம். அதைவிடுத்து அத்தியாவசியமானதும், மனிதாபிமானதுமான பிரச்சினைத் தீர்வுகளுக்கு நிபந்தனைகளை முன்வைப்பது ஏற்கத்தக்கதாக மாட்டாது.

# 1970–79 வரையான மறக்க முடியாத யுத்தத்தின் 2 ஆம் கட்டம் விரைவில் ஆரம்பிக்கும்

## முன்னாள் பிரதிநிதியமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

1970-1979 வரையான யுகம் மகளால் மறக்கப்பட முடியாத காலமாகும். அதன் இரண்டாவது கட்டம் மிகவிரைவில் ஆரம்பமாக விருககின்றது. மக்கள் விரைவில் படடினிச்சாவை எதிர்நோக்கப் போகிறார்கள் என முன்னாள் பிரதியமைச்சர் பந்துல குணவர்த்தன எச்சரிக்கை விடுத்தார்.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சித தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

1970-1979 வரையான யுகம் நாட்டு மக்களால் மறக்கப்பட முடியாத காலமாகும். அதன் 2ஆவது கட்டம் மிக விரைவில் ஆரம்பமாக விருக்கின்றது. மக்கள் மிக விரைவில் பட்டினிச்சாவை எதிர்நோக்கப் போகின்றார்கள்.

அரசாங்கம் அதன் தேசிய பொருளாதாரக் கொள்கைத்திட்டத்தை உடன் வெளியிடவேண்டுமென நாம் பலதடவை கேட்டு விட்டோம். ஆனால் அரசிடம் அப்படியொன்று இருப்பதாகவே தெரியவில்லை.

பொய் கூறி மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த அரசு, ஏமாற்று வழியிலேயே காலம் கடத்தப் பார்க்கின்றது. அப்பாவி மக்கள் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டிருக்கின்றார்கள்.

ஆனால் ஜே.வி.பியின் முதல் அமைச்சுப் பதவிகளைப் பெற்றிருக்கும் சகலரும் சுகபோக வசதிகளைப் பெற்று வருகின்றனர். நாடு மீண்டும் வறுமைக் கோட்டிற்குள் சென்று கொண்டிருக்கின்றது. அரசாங்கம் சரியான திசையில் பொருளாதார நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி ஏற்படலாம் என அவர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு அமெரிக்கப் பொருளாதார நிபுணரான பேராசிரியர்கள் பெப்பனிக் என்பவரின் ஆலோசனையையும் உதவியையும் அரசாங்கம் பெற்றுள்ளதாகவும் அதற்காக அரசு அவருக்கு ஒரு மாத காலத்துக்கு 20 இலட்சம் ரூபாவை வேதனமாக வழங்கியிருப்பதாகவும் தெரிவித்ததோடு உலகவங்கி உதவி வழங்கும் நாடுகளின் எந்த விதமான ஆதரவையும் பெறாமல் தாங்களே பட்ஜெட்டை தயாரித்திருப்பதாகத் தம்பட்டமடிக்கும் ஜே.வி.பியினர் அமெரிக்க பொருளாதார நிபுணரின் ஒத்துழைப்பு பற்றி என்னதான் கூறப்போகிறார்கள் என்றும் கேள்வி எழுப்பினர்

# பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட ஜப்பானிய மக்களுடன் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளும் ஈழத்தமிழர்

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட ஜப்பானிய மக்களுடன், ஈழத்தமிழர்கள் தம் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

இது குறித்து கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.ஜப்பான் மக்கள் சூறாவளி. பூகம்பம் போன்ற அனர்த்தங்களால் அண்மையில் பாதிக்கப்பட்டதை அறிந்து நாம் கவலையுறுகிறோம். ஜப்பானிய மக்களோடு ஈழத்தமிழர்கள் தம் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

எமது மக்கள் குரூரமான இன மேலாதிக்கத்தால் பாதிக்கப்பட்டு வரும் இந்நேரத்தில இலங்கையில் நிலவும் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துத் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இலங்கைத்தீவில் நலமுற வாழ்வதற்கு எடுக்கும் முயற்சிகளில் ஒரு முக்கியபங்கை வகிக்கும் நாடு ஜப்பான். அந்தகையதொரு நாட்டில் இந்த அனர்த்தம் ஏற்பட்டிருப்பது ஈழத் தமிழ் மக்களுக்கு மிகுந்த கவலையைத் தருகின்றது.

முயற்சி நிறைந்த ஜப்பானிய மக்களுக்கு நாம் சொல்வது இது தான். மற்றவர்களுக்கு நன்மை செய்யும் எண்ணம் கொண்ட உங்களுக்கு இப்படியான துன்பங்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்த மாட்டாது. உங்கள் மனவலிமையால் துன்பங்களிலிருந்து வெளியேறி புதியவாழ்வை அமைத்துக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. மிக நீண்ட தூரத்தில் இருந்தாலும் உணர்வு ரீதியாக உங்களுடன் நின்று உங்கள் துன்பங்களில் பங்குகொள்கிறோம் என்பதை ஈழத்தமிழர்கள் சார்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தெரிவித் துக்கொள்கிறது.

## மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி மீதான தாக்குதல்

# குற்றச் சாட்டை நிராகரிக்கும் வகையில் பொலிசார் நீதிமன்றில் ஆவணங்கள் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், இடம்பெற்ற அடையாள அணி வகுப்பில் பொலிசார் போலியான தகவல்களை வழங்கியிருந்ததாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் கொடிகாமம் மற்றும் யாழ்.நகரப் பொலிசார் ஆவணங்களை நேற்று யாழ்.நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளனர்.

யாழ்.நீதிமன்றில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரியான ஆர்.பி.றுவன் சந்திசேகரவினால் அடையாளம் காட்டப்பட்டிருந்த பொலிசாரில ஒருவர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் எனக் கூறி அப்போது நிராகரிக்கப் பட்டிருந்தார். ஆயினும் இவர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவரெனவும், சம்பவ தினத்தன்று யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியிருந்தவரெனவும் கூறி றுவன் சந்திசேகர தனது சட்டத்துறையான எம்.ரெமீ டியஸ் மூலம் நீதவானின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார்.

இதையடுத்து சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று 24 மணி நேர கால எல்லையினுள் கொடிகாமம் மற்றும் யாழ்.நகரப் பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிய பொலிசார் தொடர்பான விபரங்களை நீதமன்றிற்கு சமர்ப்பிக்குமாறு நீதிவான் இ.த.விக்கினராஜா உத்தரவொன்றைப் பிறப்பித்திருந்தார்.

இதனையடுத்தே குறித்த தினத்தன்று கொடிகாமம் மற்றும் யாழ்.நகரப் பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிய பொலிஸார் விபரம் நேற்று நீதிமன்றில் சமர்பிக்கபட்டுள்ளது. எனினும் குற்றம் சாட்டப்பட்ட பொலிசார் அசம்பாவித தினத்தையும் உள்ளிட்ட மூன்று நாட்கள் கொடிகாமம் பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட வறணிப்பகுதியில் கடமையாற்றியமைக்கான ஆவணங்கள் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளனர். (27)

# திருமலைக் கடற்படைத் தளத்திற்கு சனாதிபதி வெள்ளிக்கிழமை விஜயம் செய்ய முடிவு

சனாதிபதி சந்திரிக்கா பண்டரநாயக்க குமாரதுங்க எதிர் வரும் வெள்ளிக் கிழமை திருகோணமலைக்கு விஜயம் செய்யவிருப்பதாக மாகாண ஆளுனர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அன்றைய தினம் காலை பத்து மணியளவில் திருகோணமலை டொக்யார்ட் கடற்படைத்தள விளையாட்டரங்கில் வடக்குகிழக்கு மாணவர்களுக்கான மிலேனியம் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு, ரணவிரு வீடமைப்புத் திட்ட பரிசளிப்பு நிகழ்வு ஆகியவற்றில் சனாதிபதி பிரதம அதிதியாகப் பங்கு பற்றுவார் என்றும் அவ் வட்டராங்கள் கூறின.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 24 கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 1014 மாணவர்கள் மிலேனியம் புலமைப் பரிசிலைப் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 150 மாணவர்களுக்கு மட்டுமே சனாதிபதி வெள்ளிக்கழமை காலை நடைபெறும் நிகழ்வில் புலமைப் பரிசில்களை வழங்கி வைப்பார். ஏனைய மாணவர்களுக்கு அவர்களுக்குரிய புலமைப்பரிசில்கள் சம்பந்தப்பட்ட கல்வி வலயங்களூடாக வழங்கப்படும் என்று மாகாண கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூன்று கல்வி வலயங்களிலிருந்து (கந்தளாய்,மூதூர்,திருகோணமலை) தலா 15 மாணவர்கள் வீதம் 45 மாணவர்கள் வெள்ளிக்கிழமை கடற்படைத்தள விளையாட்டரங்கில் நடைபெறும் நிகழ்வில் கலந்து கொள்ள அழைக்கப் பட்டுள்ளனர். வடக்குகிழக்கு மாகாணத்தின் ஏனைய கல்வி வலயங்களிலிருந்து மொத்தமாக 105 மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். வெளிமாவட்டங்களிலிருந்தும் வரும் இம் மாணவர்கள் திருகோணமலையில் தங்கியிருப்பதற்காக பாடசாலைகள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன. மூன்று இனங்களைச் சேர்ந்த மாணவர்கள் தங்கவென மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, விக்கினேஸ்வரா மகாவித்தியாலம், ஸாகிரா ம.வி, ராற்கீய ம.வி, சிங்கள மத்திய ம.வி ஆகியன ஒழுங்கு செய்யப்பட்டன. (25)

# தேரரின் கடவுச் சீட்டில் வெள்ளைப் பவுடர்

# கொழும்பில் கனேடியத் தூதரகம் மூடப்பட்டது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள கனேடிய தூதரகம் "அந்திராக்ஸ்" சர்ச்சை காரணமாக காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடப்பட்ட தூதரகம் மிகவிரைவில் மீண்டும் திறக்கப்படும் என தூதரப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

விசா பெறுவதற்காக பௌத்த தேரர் ஒருவர் சமர்ப்பித்த கடவுச் சீட்டில் வெள்ளைப்பவுடர் காணப்பட்டதால் இந்தநிலை ஏற்பட்டதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடவுச் சீட்டைப் பாதுகாக்க பவுடர் போட்டு வைத்திருந்ததாக விசாரணைகளின் போது தேரர் கூறியுள்ளார்.

கடவுச் சீட்டில் காணப்பட்ட வெள்ளைப் பவுடர் பகுப்பாய்வுக்காக பொறளையிலுள்ள அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அத்தோடு விசாரணையின் பின்னர் தேரரும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## சற் புள்ளியில் பாதிப்புற்ற

# 24 மாணவர்களுக்கு மருத்துவ பீட அனுமதி வழங்க நீதிமன்றம் உத்தரவு

2000/2001ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சற்புள்ளி காரணமாக மருத்துவபீடத்தை இழந்த 24 பல்கலைகழக மாணவர்கள் சமர்ப்பித்த மனுமீதான விசாரணையை மேற்கொண்ட உயர்நீதி மன்றம் மேற்படி 24 மாணவருக்கும் வருகின்ற பல்கலைகழக அனுமதிக்காலத்தில் மருத்துவ பீடத்தை வழங்குமாறு உத்தரவிட்டுள்ளது மேலும் பாதிக்கப்பட்ட மேற்படி 24 மாணவருக்கு நஸ்ர ஈடாக ஏழுலட்சத்து இருபதாயிரம் ரூபாவினை வழங்குமாறும் பல்கலைகழக மானிய ஆணைக்குழுவிற்கு உத்தரவிட்டுத் தீர்ப்பு வழங்கியுள்ளது. (32)

# பாராளு.உணவகத்தில் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் விற்பனையாகும் உணவு வகைகளின் விலை 10 மடங்கால் உயர்வு பெற்றிருக்கிறது.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இப்புதிய விலையின்படி 6 ரூபாவுக்கு வழங்கப்பட்ட காலை உணவின் பெறுமதி 60 ரூபாவாகவும் 15 ரூபாவுக்கு வழங்கப்பட்ட பகல் உணவு 150 ரூபாவாகவும் உயர்ந்துள்ளது. இதனால் பாராளுமன்றத்திற்குச் செல்லும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ,சாரதிகள், பாராளுமன்ற ஊழியர்கள் எனப் பல தரப்பட்டோரும் இப்புதிய அதிகரிப்பு விலையிலேயே உணவு வகைகளைப் பெற முடியும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.. இப்புதிய நடவடிக்கையினை பாராளுமன்ற நிர்வாகக் குழுவே அமுலுக்குக்கொண்டு வந்திருக்கிறது. (32)

# யாழ்ப்பாணத்தில் சிறப்புற நடந்த ஐ.நா 59ஆவது ஆண்டு நிறைவு தினம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் 59 ஆவது ஆண்டு நிறைவு தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் மிகச்சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

ஐக்கியநாடுகள் சபையின் கிளை நிறுவனங்களான ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் ஐக்கிய நாடுகளின் சிறுவர் பாதுகாப்பு நிதியம், ஐக்கிய நாடுகள் சுகாதார நிறுவனம், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித்திட்டம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் கொண்டாடப்பட்ட இவ் ஐக்கிய நாடுகள் தினத்தின் விசேட நிகழ்வுகள் நேற்று முற்பகல் 10.00 மணியளவில் யாழ். பொது நூலக மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதிகளுக்கு மொராட்டா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் மற்றும் மனிதஉரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். இணைப்பாளர் ருவான் சந்திரசேகரா, தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையைச்சேர்ந்த இமையவன், யுனிசெவ்வின் யாழ். வதிவிடப் பிரதிநிதி யூடிற் புர்னே மற்றும் ஐ.நாவின் கிளை நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உட்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் உரையாற்றும்போது,

உலகில் சமாதானத்தையும்,அமைதியையும் உருவாக்குவதற்கு 59 நாடுகளுக்கு முன் ஐ.நா சபை உருவாக்கப்பட்டாலும் கூட அது உருவாக்கப்பட்டதன் இலக்கை அல்லது நோக்கத்தை இன்னமும் அடையவில்லை.

நிரந்தர அமைதியைவிட யுத்தமும், பட்டினிச்சாவும் உலக அரங்கில் இன்றும் பெரும் பிரச்சினையாக உள்ளது எனச் சுட்டிக் காட்டியதுடன்

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நா உதவும் அமைப்புக்களின் உதவி மிகவும் அவசியம் எனவும் தெரிவித்தார். (33)

# தருமபுரத்தில் வீதி விபத்து இருவர் காயம்

(கிளிநொச்சி)

பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் தருமபுரம் உழவனூர் சந்தியில் நேற்று மாலை நடைபெற்ற உந்துளிவாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

வீதியால் வந்த வாகனமும், வீதிக்கு முற்பட்ட உந்துருளி விபத்துக்குள்ளானது. நேற்று மாலை 6.00 மணியளவில் நடைபெற்ற இவ் விபத்தில் உந்துருளியில் வந்த இருவரும் படுகாயமடைந்தனர். முத்துஐயன் கட்டு கெருடமடுவைச் சேர்ந்த ஜயாத்துரை சிவசண்முலிங்கம் (வயது-34), மகாலிங்கம் இராச லிங்கம் (வயது-31) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் தருமபுரம் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ)

## மட்டு ஆறுமுகத்தான் குடியிருப்பில்

# வீட்டிற்குள் புகுந்தவர்களால் இளைஞன் சுட்டுக்கொலை

(கொழும்பு)

மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்புக் கிராமத்தில் இளைஞன் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் கந்தசாமி வசந்தன் என்ற பதினெட்டு வயதுடைய இளைஞனே கொல்லப்பட்டவர் ஆவார்.

இரவு இவ்வீட்டிற்கு வந்த மூன்று ஆயுதபாணிகள் கதவைத் திறக்குமாறு கோரியதாகவும், கதவு திறக்கப்படாததையடுத்து திரும்பிச் சென்ற ஆயுதபாணிகள் மீண்டும் 9 மணியளவில் அயல்வீட்டுப் பெண்ணொருவரின் உதவியுடன் வீட்டிலுள்ளவர்களை அழைத்த போது அவர்கள் கதவைத்திறந்தாகவும், அந்தநேரம் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த ஆயுதபாணிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு வீட்டிற்குள் தேடுதல் நடத்திவிட்டுச் சென்றதாகவும் ஏறாவூர் பொலிசார் மேற்கொண்ட ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் ரீ-56 ரகத் துப்பாக்கியின் நான்கு வெற்றுத்தோட்டாக்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும், கொல்லப்பட்டவரின் உடலில் மூன்று துப்பாக்கிச் சூட்டுச் காயங்கள் காணப்படுவதாகவும், கொலையாளிகள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஐ.நா.சபையுடன் இணைந்து நாட்டை அபிவிருத்திசெய்ய திட்டமாம்

## வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆயிரம் அபிவிருத்தித் திட்டங்களுடன் இணைந்து சிறிலங்காவை அபிவிருத்தி செய்வதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கையை எடுத்து வருகின்றது. என லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

ஐ.நா. அமைப்பும் அதனுடன் இணைந்து செயற்படுகின்ற ஏனைய நிறுவனங்களும் அனுசரணை வழங்குகின்றன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடகிழக்கை மறுசீரமைப்பதற்கும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் இவர்கள் முன்வந்துள்ளனர். ஒருவருக்கொருவர் அன்னியோன்னிய ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் ஐ.நா.அமைப்பின் கொள்கைகளை ஸ்திரப்படுத்துவதற்கான எமது அர்ப்பணிப்பை வழங்குவதால் இதற்கு புத்துயிர் அளிக்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தாயினதும்...

பிரஸ்தாப நபர்கள் இருவரையும் நேற்று முன்தினம் இரவிலிருந்து காணாததைத் தொடர்ந்து அவர்களது குடும்பத்தவர்கள் நடத்திய தேடுதல் மூலமாக இவ்விருவரும் கிணற்றினுள் சடலங்களாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதும். இதனையடுத்து அப்பகுதிக்கு வந்த பொலிசார் அச்சடலங்களை மீட்டு மந்திகை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். (33)

## இராணுவ...

சாலை நேற்றுக் காலை திறக்கப்பட்டிருந்தது.அப்பகுதியில் படையினரும், பொலிசாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கையிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இதனால்கோபமுற்ற அப்பகுதிப் பொது அமைப்புப் பிரதிநிதிகள் திரண்டு எதிர்ப்புக் கோஷாங்களை எழுப்பியவாறு காங்கேசன்துறை வீதியூடாக உடுவில் பிரதேச செயலகம் வரை ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தினர். ஊர்வலத்தின் முடிவில் காலை 10 மணி முதல் பிரதேச செயலகத்தின் நுழைவாயில்களை மூடி எதிர்ப்புப் போராட்டங்களிலும் அவர்கள் ஈடுபட்டனர். பொதுமக்களையோ, அரச அதிகாரிகளையோ உள்ளே நுழைய விடாது இந்தப் போராட்டம் இடம் பெற்றது

## வெள்ளவத்தையில்....

தில் ஒருவர் உயிரிழந்தார். இன்னொருவர் படுகாயமடைந்தார். மற்றுமொருவர் சிறுகாயம் அடைந்தார். மேலும் ஒருவர் காயம் எதுவுமின்றித் தப்பிக்கொண்டார்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபர் யாரென்பது இன்னமும் அறியப்பட வில்லை. அத்துடன் உயிரிழந்த இளைஞன் குறித்த விபரங்களும் தெரியவர வில்லை.

ஆயினும் கருணா குழு உறுப்பினர்கள் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகப் பொலிசார் தெரிவித்திருக்கின்றபோதிலும் அது உறுதிப் படுத்தப்படவில்லை எனக் கொழும்புச்செய்திகள் கூறுகின்றன. (32)

## புலிகளிடம்..

அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி முடக்கிவைத்திருந்தது. அந்தக் காலத்தில் சனாதிபதி இரவில் நித்திரை கொள்ளாது பகலிலேயே கொண்டார். இதனால் அவருக்கு முகத்தில் கரும் புள்ளிகள் ஏற்பட்டு இருந்தன இந்த நிலையில்தான் தேசாபிமானிகள் அமைப்பும் ஜே.வி.பி. யும் இணைந்து ஐதேசியக்கட்சியின் ஆட்சியை கலைத்து சனாதிபதியை மீட்டெடுத்தோம். ஆனால் தற்போதையக் அரசில் இருக்கும் சிலர் அந்நிலையை மறந்து செயற்படுகின்றார். அவர்கள் பழைய நிலையை மறக்கக் கூடாதஅளவிற்கு நாம் எதிர்காலத்தில் எமது நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போகிறோம்.

நாம் இந்த இடைக்கால நிர்வாக யோசனையை ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை தமிழீழ விடுதலைப் புலிகளிற்கு இடைக்கால நிர்வாகத்தை கொடுத்தால் அது தனியான ஒரு நிர்வாகத்தை அவர்களுக்கு விட்டுக்கொடுப்பதாக அமைந்து விடும். இது தனி நாட்டுக்கு வழிவகுக்கும் இவ்வாறு இடம் பெறுவதற்கு தாம் ஒரு போதும் அனுமதியோம் அதையும் மீறி அரசாங்கம் இடைக்கால நிர்வாகத்தைக்கொடுக்க முனையுமானால் அரசாங்கம் பலவித மான சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிவரும் என்றும் விமல் வீரவன்ச குறிப்பிட்டார்.

தேசாபிமானிகள் அமைப்பின் தலைவர் எல்லேகுணவன்ச தேரர் கருத்துத்தெரிவிக்கையில், அரசாங்கம் இடைக்கால தன்னாட்சி அதிகாரத்தை விடுதலைப் புலிகளிற்குக் கொடுக்குமாக இருந்தால் தமது பிணத்துக்கு முன்னால் தான் அதைக் கொடுக்க வேண்டிவரும் எனவும் தாம் இதற்கு எதிராக சாகும் வரையிலான போராட்டங்களை நடத்தவும் தயங்கமாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார். (32)

## விவசாய...

செய்யக்கூடிய சாதக நிலை குறித்து ஆராய்ந்து வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உயர்நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது. ஏற்கனவே இவ்வாறான இரண்டு மனுக்கள் உயர்நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (32)

## கேணல்....

சிகிச்சைக்காக சிங்கப்பூருக்குச் சென்றிருந்த கடற்புலிகளின் தளபதி கேணல் சூசைஅவர்களும் நேற்றுக் கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

அரசியல் குழுவினரில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களும், தளபதி கேணல் சூசை அவர்களும் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து உலங்குவானூர்தி மூலம் நேற்றுக் காலை 7.45 மணியளவில் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தனர். இவர்களை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களும், தளபதி கேணல் தீபன் அவர்களும் கைலாகு கொடுத்து வரவேற்றனர். அத்துடன் அரசியல் குழுவின் அடுத்த தொகுதியினர் கொழும்பிலிருந்து தரைவழியாக கிளிநொச்சியை வந்தடைந்தனர். இவர்களில் தமிழீழ நீதிநிர்வகப்பொறுப்பாளர் பரா, மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அரசியல்துறை மகளிர் துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி ஆகியோரே தரைவழியாக வந்தடைந்தனர்.

பின்னர் மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மட்டக்களப்புக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(கு,தீ)


# முக்கிய அறிவித்தல்

சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கம் தருமபுரம் கிளையில் 1990ஆம் ஆண்டிலிருந்து 2002ஆம் ஆண்டு வரை கடன் எடுத்தவர்கள் தங்களின் கடனை சங்கத்தின் நன்மை கருதி 15.11.2004 இற்கு முன்னதாகச் செலுத்தி மீண்டும் 2004ஆம் ஆண்டு கால போக நெற் செய்கைக்குக் கடனை வழங்குவதற்கு ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றோம். குறிப்பிட்ட திகதிக்குள் செலுத்தாதவர்களுக்கு சட்ட நடவடிக்கை மூலம் கடன் அறவீடு செய்யப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகத்தினர்,
சி.க.கூ.சங்கம்,
தருமபுரம்.

சி-10498)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.